# செந்தமிழ்ச் செல்வி

I. I. T. S.
No. 893 / 18-3-74
LIBRARY

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| கழகம் ஆற்றிய வரலாற்று நூற்சிறப்புப் பணி | ௱௦௫ |
| உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள் | ௱௧௦ |
| இளநீர் | ௱௨௧ |
| ஆப்பிரிக்கச் சுற்றுலா | ௱௨௬ |
| கிழவர் இளங்கோ | ௱௩௩ |
| தமிழில் எழுதுவோம் | ௱௩௮ |
| திரு. மு. அருணசலத்தின்......வசை புராணம் | ௱௪௭ |
| அருள்மிகு தண்டபாணி அடிகள் | ௱௫௩ |
| இலங்கை உலகத் தமிழ் மாநாட்டுத் தமிழ்ப் பேராளர்கட்குச் சென்னையில் வரவேற்பு | ௱௫௬ |
| மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு 6 லட்ச ரூபாய் நன்கொடை | ௱௫௭ |
| செய்திகளும் குறிப்புகளும் | ௱௫௮ |
| மதிப்புரை | ௱௬௦ |


சிலம்பு ௪௮] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௫, தை (Feb'74) [பரல்–௬

# 'செந்தமிழ்ச் செல்வி'


## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

௧. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
*தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்*

௨. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை

௩. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
*இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.*

௪. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
*அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.*

௫. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
*பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)*
கொழும்பு.

௬. புலவர் இரா. இளங்குமரன்,
*திருநகர், மதுரை-6.*

௭. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
*நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.*


---


# VOICE OF VALLALAR

By Rao Sahib S. R. V. Arasu

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளலார் பெருமானின் 'திருவருட்பா' தெவிட்டாத தீந்தமிழ்த் தெய்வ இலக்கியமாகும். இதனை இதுவரை அனைவரும் பரமனைப்பாடும் பாமாலையாகக் கண்டார்களே தவிர அதில் பொதிந்துள்ள அறக் கருத்துக்களையும் அறிவுரைகளையும் போற்றினரில்லை. மக்களனைவரும் ஒருநிலையாய் வாழ்ந்து, பாரில் கிடைப்பதைப் பகுத்துண்டு வாழ வேண்டுமென்று வள்ளற்பெருமான் கூறியிருப்பதை மக்களுணர்ந்து அதன்வழி நடக்க வேண்டுமென்பதற்காக வள்ளற்பெருமானின் அறிவுரைகளைத் தெளிவாக ஆங்கிலத்தில் இராவ்சாகேப் திரு எஸ். ஆர். வி. அரசு அவர்கள் எழுதியுள்ளார்கள். அருட்பாவில் பொதிந்துள்ள பொருளியல் நோக்கைத் தெளிவாக எடுத்துக்காட்டி அதை வெறும் பக்தி இலக்கியமாகப் படிப்பதில் மட்டும் பயனில்லை என்று அவர் இந்நூலில் ஆங்கிலத்தில் விளக்கியுள்ளார். வள்ளற்பெருமானின் சித்தி நூற்றாண்டு விழாவையொட்டி இது வெளிவருகிறது. ரூ. 5 00

# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு

சிலம்பு ௪அ | திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௪, தை  
பிப்ரவரி 1974 | பரல்


LIBR

# கழகம் ஆற்றிய வரலாற்று நூற்சிறப்புப் பணி

வரலாறு பலவகைப்படும். வரலாறு (History), வரலாற்றியல் (Histriography), வாழ்க்கை வரலாறு (Biography), தன் வரலாறு, என் சரிதம் (Autobiography), வாழ்க்கைக் குறிப்புக்கள் (Memoirs), செய்தித் துணுக்குகள் (Anecdotes), வாழ்க்கை (Life), வாழ்க்கையுருவம் (Life sketch), கதை (Story) ஆகிய தலைப்புக்களில் வரலாற்று நூல்கள் வெளிவந்திருப்பதைக் காண்கிறோம்.

மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, நாட்டு வரலாறு, குல வரலாறு, சமயத் தலைவர், புலவர், கவிஞர், பலதுறைக் கலைஞர், கைவினைஞர் ஆகியோர் வரலாறுகள், பல்வேறு தொழிற் றுறைகளின் வரலாறு, திருக்கோயில்கள், திருமடங்கள், சமய மன்றங்கள், தமிழ்க் கழகங்கள், பலதுறைக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் வரலாறுகள், நிலம், ஆறு, மலை, கடல், காடு, வானம் ஆகியவற்றின் வரலாறுகள், அரசியல் கட்சிகளின் வரலாறுகள், போர் வரலாறுகள் இவையாவற்றையும் பற்றிய வரலாற்று நூல்களைக் காண்கின்றோம். ஒரு நாட்டின் வரலாற்றை முற்ற முடிய எழுத வேண்டுமெனின் மேலே கூறப் பட்டவற்றையெல்லாம் தொகுத்து எழுதுதல் வேண்டுமென்பது நன்கு பெறப்படும். நிலநடுக்கம், எரிமலை, புயல், பெரு வெள்ளம், கடல் கொந்தளிப்பு முதலியவற்றைப் பற்றிய வரலாறுகளையுங் காண்கின்றோம்.

இத்தகைய வரலாறுகள் நம் பழைமையின் சிறப்புக்களையும், குறைகளையும், துன்பங்களையும் உணர்தற்கும், அங்ஙனம் உணரும் வாயிலாகக் குறைகளை நீக்கவும் துன்பங்கள் நேராமல் காக்கவும் வழிகாணுவதற்கும், நம் முன்னோர் சென்ற சீரிய வழிகளைப் பின்பற்றி நடப்பதற்கும் வழிகாட்டுஞ் செல்வங்களாகும். வரலாறுகள் தனிப்பட்டோரால் எழுதுவனவாகவும், குழுவினர் கூடி எழுதுவனவாகவும், அரசினரே எழுதுவனவாகவும் அமையும். சில வரலாற்று நூல்கள் நமக்கு நேரப்போகும் தீங்குகளினின்றும் நம்மைக் காத்துக் கொள்வதற்குரிய வழிகளை எடுத்துக் காட்டுவனவாகும்.

மொழி வரலாறு படிப்பதால் நமது மொழியின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, அதன் இலக்கண வரம்பு, சிறப்புத் தன்மை, பிறமொழிகளின் கூட்டுறவுகளால் ஏற்பட்ட, ஏற்படும் தீங்குகள் முதலியவற்றை அறிந்து தீங்குகளை விலக்கி அதன் தூய்மையினைக் காத்துக்கொள்ள வழி நல்கும்.

இலக்கிய வரலாற்றால் நம் மொழியில் தோன்றிய இலக்கண இலக்கிய நூல்களைக் காலவரையறையின்படி அறிந்து பேணிக் காக்க வழி ஏற்படும். வரலாறுகள் எழுதுவதற்கு நிலவகழ் வாராய்ச்சி, கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், ஓலைச் சுவடிகள், அச்சுவந்த பின் அச்சிடப் பெற்ற நூல்கள், அவற்றின் முன்னுரைகள், அவற்றிற்குப் புலவர்களால் வழங்கப் பெற்ற சாற்றுக் கவிகள், அணிந்துரைகள், புலவர் ஒருவர்க்கொருவர் எழுதிய கடிதங்கள், பல்வேறு நிலையங்கள் புலவர்கள் ஆகியோரின் மணிவிழா, பவளவிழா, முத்துவிழா, வயிர விழாக்கள் ஆகியனவும் அவ் விழாக்களில் வெளியிடப்பட்ட மலர்கள், பழைய இதழ்த் தொகுதிகள் முதலியனவும் துணை புரிவதைக் காண்கின்றோம்.

மேலைநாட்டு அறிஞர் சிலர் தென்னாட்டுக் குலங்களும், குடிகளும் (South Indian Castes and Tribes), தென்னிந்தியர் பழக்க வழக்கங்களும் பண்பொழுக்கங்களும் (South Indian customs and manners), இந்திய மொழிகளின் ஆய்வேடு (Linguistic Survey of India) முதலிய நூல்கள் வரலாறு கூறுவனவாகும். அமெரிக்க அறிஞர் ஒருவர் நாடார் குலத்தினரைப்பற்றி நூலொன்று எழுதியுள்ளனர். மற்றொருவர் வேளாளர் குலத்தினரைப்பற்றி ஆய்வு நூல் எழுதக் குறிப்புக்களைத் தொகுப்பதற்கு வந்திருக்கின்றனர்.

சர் ஜான் மார்ஷல் என்பவர் சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றி மூன்று பகுதிகள் அடங்கிய தொகுதி யொன்றை

முன்னமே வெளியிட்டார். அவை விற்று முடிந்து பல ஆண்டு கட்குப் பின் இப்போது அவை மீண்டும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன வென்று அறிகின்றோம்.

நமது மொழியின் தொன்மை, சீர்மை, தனித்தன்மை முதலியன தெரிவதால் மட்டுமே பிறமொழி ஆதிக்கத்தை யுணர்ந்து தடுக்கிறோம். நந் தாய்நாட்டின் வரலாற்றை உள்ள படி யறிவதனுற்றான் அதன் எல்லையிலுள்ள பகுதிகள் பறி போகாவண்ணம் பாதுகாப்பதற்கு விழிப்புடன் ஆவன செய்து வருகின்றோம். பறிபோன பகுதிகளை மீண்டும பெறவும் வழி காண்கின்றோம், ஆற்றுநீர்ப் பங்கீடு பற்றிய பேச்சுக்களும், கச்சாத் தீவு உரிமை பற்றிய பேச்சும் நடைபெறுகின்றன. எனவே நந் தாய்மொழி வரலாறும், நந்தாய் நாட்டின் வரலாறும் நமக்கு இன்றியமையாதனவாகும் என உணர்கின்றோம்.

அழிந்தொழிந்து போன இலக்கியங்களை யெல்லாம் கல்வெட்டிலிருந்தும் சிதைந்து போன சுவடிகளிலிருந்தும் அறிந்து வருந்துகின்றோம். எனவே இலக்கிய வரலாறு முதன்மையாகின்றது.

சேர சோழ பாண்டிய மன்னர்களின் வரலாறுகளை ஒரோ ஒருவகையில் அறிகிறோமேயன்றி உள்ளவாறே முழுமையும் அறிவதற்குப் போதிய குறிப்புகள் பாதுகாக்கப்பட்டு வைக்கப் பெறவில்லை என்பது வருந்துதற்குரியது.

கலைச் செல்வம் நிறைந்த திருக்கோயில்களைப் பார்த்து வியக்கிறோம். ஆனல் அவற்றைக் கட்டிய வினைத்திறன் மிக்க சிற்பிகளின் படங்களையோ வரலாறுகளையோ பார்க்கவோ படித்தின்புறவோ முடியாதவர்களா யிருக்கின்றோம். கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறைமுகப் பட்டினங்களைப் பற்றிய குறிப்புக்களை நூல்கள் வழியும், அங்கே கிடைக்கும் பொருள்களையும், சின்னங்களையும்கொண்டும் ஒருவாறுஅறிந்து இன்புறுகின்றோம். எனினும் போதிய அளவு குறிப்புக்கள் கிடைக்கப் பெறவில்லை என்பது உண்மையான செய்தியே யாகும்.

அமெரிக்க விண்வெளி வீரர்கள் நிலவு மண்டலத்தில் இறங்கியதனுல் எத்தனையோ கருத்துக்களை அறிந்து வந்திருக் கின்றனர். அங்கிருந்து எடுத்து வந்த கற்களைக் கொண்டு அம்மண்டலம் எப்போது தோன்றியிருக்கும் என்பது போன்ற ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றனர். வான் ஆராய்ச்சி நிலையம் (Sky lab) அமைத்து ஆய்வு நடத்துகின்றனர்.

மக்கள் ஒவ்வொருவரும் தம் வரலாற்றைத் தாம் அறியா விடினும் பிறந்த நாட் குறிப்பு (சாதகம்), உருவத்தோற்றம், கைவரி (கைரேகை), வாய்ச்சொல் முதலியன கொண்டு சோதிடர்கள் வரலாற்றை விவரித்துக் கூறுகின்றனர்.

மேலை நாட்டில் வெளியிடப் பெற்ற இரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்களைப் பற்றிய செய்திகளை அடியிற் காண்க.

**வாழ்க்கை வரலாறு**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டால் அவர் வழியினர் மேன்மேலும் வாழ்க்கையில் வெற்றி பெறுதற்குப் பயன்படும் என்றே முன்னோர்கள் பல்துறைகளிலும் சிறந்து விளங்கிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிவைத்தனர். இவ் வகையில் பார்க்கும்போது இத் துறையில் முன்னோடியாக விளங்கியவர் கிரேக்கப் பேரறிஞரான புளூடார்க் தான்[1] 46 கிரேக்கர் ரோம வீரர்களின் வீர வரலாற்றை அவர் நூலாக எழுதியுள்ளது இன்றும் உலக இலக்கியங்களுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

அதன் பின்னர் பல வாழ்க்கை வரலாற்று நூல்கள் வந்துள்ளன. ஆங்கில மொழியில் வாழ்க்கை வரலாற்று நூல்களும் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளன. ஆயிரக் கணக்கில் அவை வெளி வந்திருப்பினும் அவற்றில் மிகச் சிறந்து விளங்குவது ஜேம்ஸ் பாஸ்வெல் (James Boswell) எழுதிய டாக்டர் சாமுவெல் ஜான்சனின் வரலாறு[2] தான். ஆங்கிலப் பேரகராதியைத் தொகுத்தவர் டாக்டர் ஜான்சன். அதற்கு அடுத்து இடம் பெறுவது லாக்கார்ட் எழுதிய சர் வால்டர் ஸ்காட்டின் வரலாறு[3]. ஸ்காட் ஆங்கிலத்தில் பல சுவையான புதினங்களைப் படைத்தவர்.

இந்த இரண்டு வரலாறுகளும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் இருவருமே வரலாற்றுத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள். ஜான்சனின் நெருங்கிய நண்பர் பாஸ்வெல். ஸ்காட்டின் மருமகனார் லாக்கார்ட்.

பாஸ்வெல்லும் ஜான்சனும் முதன்முதல் சந்தித்தபோது முன்னவருக்கு வயது 23. பின்னவருக்கு 54. இருப்பினும்

1. Plutarch's Parallel Lives.
2. James Boswell: The Life of Samuel Johnson.
3. J. G. Lockhart: Memoris of the Life of Sir Walter Scott.

இருவரும் அன்பால் பிணைப்புண்டு 21 ஆண்டுகள் வாழ்ந்தனர். அதிலும் 276 நாட்கள்தான் இருவரும் ஒன்றாக இருந்தனர். 'புணர்ச்சி பழகுதல் வேண்டா' என்பதற்கொப்பக் குறுகிய காலமே அவருடன் இருப்பினும் அவர் எழுதியுள்ள வரலாறு அதற்கு முன்னும் பின்னும் உலகத்தில் வேறெங்கும் காண முடியாததாக அமைந்துவிட்டது.[1]

இவ்வாறு தனிவரலாறுகள் நூலாக வெளிவந்துள்ளது போல பலருடைய வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துச் சுருக்கியும், வரலாற்றில் சில சுவையான பகுதிகளைத் தொகுத்தும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. கிளார்க்கின் உலகத்தின் சிறந்த வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கங்கள்[2] ஆசியா வெளியீட்டகத்தாரின் நூறு சிறந்த வாழ்க்கை வரலாறுகள்[3] போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முதுபெரும் புலவர் டாக்டர் சாமிநாதையர் தம் ஆருயிர் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வரலாற்றை இரு பகுதிகளாக எழுதி வெளியிட்டுள்ளனர். முதற் பகுதியில் தாம் பாடங் கேட்பதற்கு முன் அவர்தம் மாணவர்கள் வழியும் ஆசிரியர்தம் நூல்கள் வழியுங் கேட்டும் அறிந்துமுள்ள குறிப்புக்களைத் தொகுத்து வரலாற்றைச் சுவை கெழும எழுதியுள்ளனர். இரண்டாவது புத்தகத்தில் தாம் பாடங் கேட்ட காலத்தில் குறித்து வைத்திருந்த குறிப்புக்களை வைத்து வரலாறு எழுதப் பெற்றது.

டாக்டர் ஐயர் தம் வரலாற்றையும் தாம் எழுதி வைத்திருந்த குறிப்புக்களைக் கொண்டு தமது 43ஆம் அகவை முடிய எழுதியுள்ளார். பிற்பகுதியினைத் தாமே எழுதி முடிப்பதற்கு முன் இறையடி சேர்ந்தமை தமிழ் மக்கட்குப் பேரிழப்பேயாகும்.

இனி அடுத்த இதழில் இந்திய நாட்டு விடுதலைக் குழைத்த பெருமக்கள் வரலாற்று நூல்கள், கழகம் வெளியிட்ட பலதுறை வரலாற்று நூல்கள் ஆகியவற்றைப் பற்றிக் காண்போம்.

—வ.சு.

---

1. Boswell's book has some distinguishing qualities of its own unmatched by any biography that the world had then or has since seen-Life of Johnson P. X

2. Clark: Great Short Biographies of the World.

3. Asia: One hundred great lives.

# உயிர்மெய் முதல் வேர்ச்சொற்கள்

## [ஞா. தேவநேயன்]

### நுல்[6]—பொருந்தற் கருத்து வேர்ச்சொல்

நுல் — நல் — நள்.

நள்ளுதல்=1. சேர்தல் "உயர்ந்தோர் தமை நள்ளி" (திருவானைக். கோச்செங். 25). 2. செறிதல். "நள்ளிருள் யாமத்து" (சிலப். 15 : 105). 3. நட்புச் செய்தல். "உறினட் டறினொரூஉம்" (குறள். 812). 4. விரும்புதல். "நள்ளா திந்த நானிலம்" (கம்பரா. கைகேசி. 26).

நள்ளி=உறவு (சூடா.).

நள்(ளு)=மருங்கு (யாழ். அக.).

நள்ளுநர் = நண்பர். (திவா). நள்ளார் = பகைவர். "நள்ளார் பெரும்படை" (கம்பரா. அதிகாயன். 219).

நள் — நளி. நளிதல்=1. ஒத்தல். "நாட நளிய நடுங்க நந்த" (தொல். உவம. 11). 2. செறிதல். "நளிந்து பலர் வழங்காச் செப்பந் துணியின்" (மலைபடு. 197). 3. பரத்தல். "நளிந்த கடலுள் திமிறிரை போல்" (களவழி. 18).

நளி—நளிய. (தி. கா. வி.)—ஓர் உவமவுருபு (தொல். 1232).

நளிவு=1. செறிவு. "நளியென் கிளவி செறிவு மாகும்." (தொல். உரி. 25). 2. கூட்டம். (பிங்.). 3. பெருமை. "தடவுங் கயவும் நளியும் பெருமை" (தொல். உரி. 22). 4. அகலம். "நளிகடற தண்சேர்ப்ப" (நாலடி. 166). 5. செருக்கு. "விந்தகிரி நளி நீக்கென்றான்" (சேதுபு. அகத். 3). 6. குறிப்பு. 7. பழிப்பு. 8. நகையாட்டு. அவன் எப்போதும் நளி பேசிக்கொண்டிருப்பான். (நாஞ். வ.).

நளி — நளம்=அகலம். (சது.).

நள் — நட்பு = 1. நேயம். "அகநக நட்பது நட்பு" (குறள். 786). 2. காதல் "நின்னொடு மேயமடந்தை நட்பே" (ஐங்குறு. 297). 3. உறவு. (பிங்.). 4. நண்பன். 5. சுற்றம். (சூடா.).

நள் — நண். நண்ணுதல் = 1. கிட்டுதல். "நம்பனையுந் தேவனென்று நண்ணுமது" (திருவாச, 12 : 17). 2. பொருந்துதல்.

நண்ணுநர் = நட்பினர். (பிங்.).

நண்ணார் = பகைவர். "நண்ணாரு முட்குமென் பீடு" (குறள். 1088). ம. நண்ணார்.

நண்மை = அண்மை. "நட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்" (புறம். 380 : 11).

நண்பு = நட்பு. "நண்பாற்றாராகி நயமில செய்வார்க்கும்" (குறள். 998). 2. அன்பு. "எம்பானே நண்பே யருளாய்" (திருவாச. 44 : 3). 3. உறவு. (பிங்.).

ம., க. நண்பு, தெ. நனுப்பு.

நண் — நணி = அண்மையான இடம். "திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்" (புறம். 154).

நண் — நணுகு. நணுகுதல் = 1. கிட்டுதல். "நானணுகு மம்பொன்குலாத் தில்லை" (திருவாச. 40 : 6). 2. ஒன்றிக் கலத்தல். "நம்புமென் சிந்தை நணுகும் வண்ணம்" (திருவாச. 40 : 6).

நணுகார் = பகைவர்.

நணுகு — நணுங்கு. நணுங்குதல் = நெருங்கிக் கலத்தல். "சுரும்பினங்கள்.......நரம்பென வெங்கு நணுங்க" (ஏகாம். உலா, 276).

நளி — நடி. ஒ. நோ : களிறு — கடிறு.

நடித்தல் = 1. ஒத்து நடத்தல். 2. கூத்தாடுதல். "நடிக்குமயி லென்னவரு நவ்விவிழி யாரும்" (கம்பரா. வரைக்காட்சி. 15). 3. வடிவெடுத்தல். "நடித்தெதிர் நடந்ததன்றே" (இரகு. ஆற்று. 20). 4. நாடகமாடுதல். 5. பாசாங்கு செய்தல். "நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து" (திருவாச. 41 : 3).

நடி = ஆட்டம். "நடிகொள் நன்மயில்சேர் திருநாரையூர்" (தேவா. 216 : 5).

நடிகன் = நாடக மேடையில் நடிப்பவன். நடிகன் — வ. நடிக.

நடிகை = நாடக மேடையில் நடிப்பவள். நடிகை — வ. நடிகா.

நடி — நடம் = தாண்டவம். "இரதமுடைய நடமாட்டுடையவர்" (திருக்கோ. 57).

நடம் — வ. நட (நட்ட).

நடம் — நடன் = கூத்தன். "வளிநடன் மெல்லிணர்ப் பூங்கொடி மேவர நுடங்க" (பரிபா. 22 : 42).

நடன் — வ. நட (நட்ட).

நடன் — நடி = நடனப்பெண். (திவா).

நடி — வ. நடீ (நட்டீ).

நடம் — நட்டம் = நடனம். "நட்டம் பயின்றாடு நாதனே" (திருவாச. 1 : 89).

நட்டம் — வ. நாட்ய, ந்ருத்த ; பிரா. நட்ட.

நட்டம் — நட்டவம் = நடம்பயிற்றுந் தொழில். "நட்டவஞ் செய்ய நட்டவம் ஒன்றுக்கு" (S. I. I. ii, 274).

நட்டவம் — நட்டுவம் = நடம்பயிற்றுந் தொழில்.

தெ. நட்டுவ.

நட்டுவம் — நட்டுவன் = நடம் பயிற்றுவோன், ஆட்டுவிப்போன். "உயிரையெல்லா மாட்டுமொரு நட்டுவனெம் மண்ணல்" (திருவாதபு. புத்தரை. 75).

ம. நட்டுவன், தெ. நட்டுவுடு. க. நட்டுவ.

நட்டுவம் — நட்டு = 1. நடம். 2. நடன். 3. நட்டுவன். இனி, நட்டம் — நட்டு — நட்டுவம் என்றுமாம். ஒ. நோ : முட்டு — முட்டுவம் — முட்டுவன்.

நடி + அனம் = நடனம் = 1. கவின்கூத்து. 2. குதிரை நடை. "பதினெட்டு நடனத்தொழில் பயிற்றி" (கொண்டல் விடு. 176). 3. பாசாங்கு. 4. மாமாலம். (இந்திரசாலம்). "நன்றுநன்றுநீ நம்முனர்க் காட்டிய நடனம்" (கந்தபு. அவை புகு. 87).

நடனம் — வ. (நட்டன) நடன.

நடனம் — நடனன் = கவின் கூத்தன்.

நடனன் — நடனி = கவின் கூத்தி. "நடித்தெதிர் நடந்த தன்றே நடனியர் தம்மின் மன்றோ" (இரகு. ஆற்று. 20).

நடி — அகம் = நாடகம் = 1. நடம். (பிங்.). 2. கதை தழுவி வருங் கூத்து.

> "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்." (தொல். அகத். 53.)

நாடகம் — வ. நாடக (நாட்டக).

நளி — நளினம் = 1. நயச்சொல். "பயிலுமானவர் பேச னளினமே" (சேதுபு. திருநா. 115). 2. நகையாட்டு. 3. முகமன்.

நள் — நய் — நய. நயத்தல் = 1. விரும்புதல். "பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று" (குறள். 150). 2. அன்பு செய்தல். (சூடா). 3. விருப்பூட்டுதல். 4. மகிழ்தல். "வல்லை மன்ற நீநயந் தளித்த" (புறம். 59). 5. பாராட்டுதல். "நல்லறிவுடையோர் நயப்பது வேண்டியும்" (பத்துப். நச். உரைச்சிறப்). 6. கெஞ்சுதல். 7. இணங்கிப்போதல். 8. இனிமையுறுதல். "நஞ்சினுங் கொடிய நாட்ட மமுதினு நயந்து நோக்கி" (கம்பரா. பூக்கொய். 7). 9. மேம்படுதல். 10. மலிவாதல். இவ்வாண்டு தவசம் நயத்துவிட்டது.

நய — நயம் = 1. விருப்பம். 2. அன்பு. "நயந்தலை மாறுவார் மாறுக" (கலித். 80). 3. தெய்வப்பற்று. "பஃறளியு நயங்கொண்டு பணிந்தேத்தி" (தணிகைப்பு. பிரமன். 54). 4. நன்மை. "நயமுணராக் கையறியா மாக்கள்" (நாலடி. 163). 5. பணிவொழுக்கம். "சான்றோரை நயத்திற் பிணித்து விடல்" (நான்மணி. 12). 6. பயன். "நல்வினை யுந்நயந் தந்தின்று." (திருக்கோ. 26). 7. இனிமை. "நாரத முனிவர்க் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்" (கம்பரா. கும்பகரு 1.) 8. மிகுதி. 9. மேம்பாடு. 10. மலிவு. காய்கறி விலை நயமாயிருக்கிறது. (உ. வ.) 11. நேர்த்தி. 12. நேர்மை.

க-, து. நய, தெ நயமு.

நயம் — நயன் = 1. நன்மை. 2. ஒப்புரவு. "நயனுடையான்கட் படின்" (குறள். 216). 3. நேர்மை. "நயன்சாரா நன்மையின் நீக்கும்" (குறள். 194).

நயப்பு = 1. விருப்பு, அன்பு. "நல்லாளொடு நயப்புற வெய்தியும்" (திருவாச. 2 : 12). 2. பாராட்டு. 3. இன்பம்.

"நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின" (கம்பரா. கரன்வதை. 47). 4. நன்மை. 5. மேம்பாடு. 6. மலிவு.

நய—நச—நசை. நசைதல்=1. விரும்புதல். "எஞ்சா மண்ணசைஇ" (மணி. 19 : 119). 2. அன்பு செய்தல். "நசைஇயார் நல்கா ரெனினும்" (குறள். 1199).

நசை=1. ஈரம். (W) 2. அன்பு. "நசையிலார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்" (திரிகடு. 94). 3. ஆசை. "நசைதர வந்தோர் நசை பிறக்கொழிய" (புறம். 15). 4. நம்பிக்கை. "அரிதவர் நல்குவ ரென்னு நசை" (குறள். 1156). பழங்க நசெ.

நசை=நண்பர். (பிங்).

நச—நசு—நச்சு. நச்சுதல்=விரும்புதல். "நச்சப்படா அதவன்" (குறள். 1004). க. நச்சு.

நச்சு—நெச்சு.

நச்சு—நத்து. நத்துதல்=விரும்புதல். "நாரியர் தாமறிவர் நாமவரை நத்தாமை" (தமிழ் நா. 74).

நத்து—நெத்து.

நசுநாறி=பிசிஞரி.

நுள் — நிள் — நிர் — நிர. நிரத்தல் = (செ. கு. வி.) 1. நெருங்குதல். "கொண்மூக் கூடி நிரந்து" (ஐந். ஐம். 5). 2. கலத்தல். "நித்திலத் தொத்தொடு நிரைமலர் நிரந்துந்தி" (தேவா. 332 : 9). 3. பரத்தல். "நிரந்த பாய்மா" (சீவக. 1859). 4. நிரம்புதல். "பரந்தது நிரந்து வரு பாய்திரைய கங்கை" (தேவா. 194 : 9). 5 போதியதாதல். பால் எல்லாருக்கும் நிரக்காது. (உ. வ.) 6. ஓர்மைப்படுதல். இருபகை வரும் நிரந்து போயினர். (உ. வ.) 7. (செ. குன்ற வி). ஒழுங்குபடுத்துதல். "நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" (குறள். 648). 8. சமபங்கிட்டளித்தல். எல்லார்க்கும் நிரந்து கொடு. (உ. வ.). தெ. நெரயு.

நிர—நிரல்=1. வரிசை. "நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு" (தொல் செய். 168). 2. ஒப்பு. "நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென" (புறம். 345).

ம. நிர, க., து. நிறுகெ.

நிரலுதல்=ஒழுங்குபடுதல். "நேரினமணியை நிரல வைத்தாற்போல" (தொல். செய். 168, உரை).

நிர—நிரை. நிரைதல்=1. (செ. குன்றா வி.) ஓலை முதலிய வற்றை வரிசையாக வைத்து மறைத்தல். வீட்டைச்சுற்றி நிறைந்திருக்கிறது. (உ. வ.). 2. முடைதல். வீடுவேயக்கிடுகு நிரைகிறார்கள். (உ. வ.). 3. ஒழுங்குபடுத்துதல். 4. நிரப்புத தல்.

(செ. கு. வி.) 1. வரிசையாதல். 2. முறைப்படுதல். 3. திர ளுதல். "நிரைவிரி சடைமுடி" (தேவா. 994 : 9).

நிரை—நிரைசல் = ஓலை முதலியவற்றால் அடைக்கும் அடைப்பு. பழங்க நெரக்கெ.

நிரை=1. வரிசை. "நிரைமனையிற் கைந்நீட்டும் கெட் டாற்று வாழ்க்கையே நன்று" (நாலடி. 288). 2. ஒழுங்கு. (சூடா). 3. கூட்டம். "சிறுகட் பன்றிப் பெருநிரை" (அகம். 94). 4. ஆன்மந்தை "கணநிரை கைக்கொண்டு" (பு. வெ. 1:9). 5. குறிலிணையும் குறினெடிலும் ஒற்றடுத்தும் ஒற்ற டாதும் இணைத் தொலிக்கும் செய்யுளசை.

ம. நிர, க, நிறி, தெ. நெரி.

நிர—நிரவு. நிரவுதல்=(செ. கு. வி.) 1. வரிசையா யிருத் தல். "நிரவிய தேரின் மேன்மேல்" (கம்பரா. முதற்போர். 151). 2. பரவுதல். "பார்முழுதும் நிரவிக் கிடந்து" (தேவா. 152:9). 3. சமனாதல். (W). (செ. குன்றா வி.) 1. சமனாக்கு தல். "உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்" (பெரும்பாண். 211). 2. சராசரி பார்த்தல். 3. அழித்து நில மட்டமாக்குதல். "அடங்கார் புரமூன்றும் நிரவவல்லார்" (தேவா. 777 : 2).

நிரவல்=1. சமனாதல். 2. சராசரி.

நிர—நிரம்பு. நிரம்புதல்=1. நிறைதல். "பருவ நிரம் பாமே" (திவ். பெரியாழ். 1 : 2 : 17). 2. பருவ மடைதல். அவள் நிரம்பின பெண். (யாழ்ப்). 3. மிகுதல். "நெற்பொதி நிரம்பின" (கம்பரா. கார்கால. 74). 4. முதிர்தல். 5. முடி வுறுதல். "நெறிமயக் குற்ற நிரம்பா நீடத்தம்" (கலித். 12). க. நெர.

நிரம்பு—நிரப்பு=1. நிறைவு. (சூடா). 2. சமதளம்' 3. சமைதி (சமாதானம்). 4. வறுமை. (ம. வ.). தெ. நிம்பு (நிம்ப்பு).

நிரப்பு—நிரப்பம்=1. ஒப்புமை. "நிரப்பமில் யாக்கை" (கலித். 94). 2. சமம். "குடக்குந் தெற்குங் கோணமுய.'

நிரப்பங் கொளீஇ" (பெருங். இலாவாண. 4 : 56—60). 3. நிறைவு. "நிரப்ப மெய்திய நேர்பூம் பொங்கலை" (பெருங். மகத. 14 : 62). 4. சிறப்பு. (திவ். திருவாய். 1 : 2:3 : பன்னீ). 5. கற்பு. (திவ். திருவாய். 5 : 3 : 3. பன்னீ).

நிரை—நிரை. நிறைதல் = 1. நிரம்புதல். "நிறையின் னமுதை" (திருவாச. 27 : ). 2. மிகுதல். நிறையக் கொடுத் தான். (உ. வ.). 3. வியன்றிருத்தல் (வியாபித்திருத்தல்). இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான். (உ. வ.). 4. பொத்திகை (திருப்தி) யடைதல். "நிறைந்த மனத்து மாதரும்" (திருவாலவா. 38 : 5). 5. அமைதியாதல்.

ம. நிறயுக, க. நெறெ.

நிர்—நெர்—நெரு. நெருநாள் = நெருங்கிய நாள், நேற்று. நெருநாள் — நெருநல் = நேற்று. "நெருநலுளனொருவன் இன்றில்லை" (குறள். 336).

நெருநலை நாள் = நேற்று. (திருக்கோ. 21, துறை விளக்கம்).

நெருநல் — நெருநை. "நெருநையி னின்று நன்று" (கலித். 91).

நெருநல் — நெருநற்று. "நெருநற்றுச் சென்றா ரெங் காதலர்" (குறள். 1278).

நெருநற்று—நேற்று. "நேற்றிரா வந்தொருவன் நித்தி ரையிற் கைப்பிடித்தான்" (காளமேகம்).

நெருநல்—நென்னல் = நேற்று. "நென்ன லேக்கி நின்றா ரொருவர்" (சிலப். 7, பாட். 45).

நென்னல் — நென்னற்று — நென்னேற்று. "காலைப் பிடிக்கா நின்ற நென்னேற்றும்" (திவ். திருப்பா. 16, வ்யா. 158).

நெர்—நெரி. நெரிதல் = 1. நெருங்குதல். "நெரிமுகைக் காந்தள்" (பரிபா. 14 : 13). 2. நெருங்கி யுரசி நொறுங்கு தல். "தலைபத்து நெரியக் காலாற் றெட்டானை" (தேவா 17 : 7).

நெரி—நெரியல்—நெரிசல் = 1. நெருக்கமான கூட்டம். 2. நெரிந்தது.

நெர்—நெரு — நெருங்கு. நெருங்குதல்=1. கிட்டுதல். 2. செறிதல். "நெருங்கு மடியார்களு நீயு நின்று" (திருவாச. 21 : 7). 3. நெருங்கிய உறவாதல். 4. ஒடுக்கமாதல்.

நெருக்கு—நெருக்கு — நெருக்கம்=1. அருகன்மை. 2. நெருங்கிய வுறவு. 3. செறிவு. 4. ஒடுக்கம். 5. வேலைக் கடினம் 6. சடுத்தம் (அவசரம்). 7. வற்புறுத்தம். 8. நோய்க் கடுமை. 9. துன்பம்.

நெருக்கு—நெருக்கடம்=நெருக்கி யழுத்தும் நிலை.

நெருக்கு—நெருக்கடி=1. நெருக்கும் மக்கட் கூட்டம். 2. சடுத்தநிலை. 3. வறுமைத் தொல்லை. 4. கடுந் துன்ப நிலை.

நெரு — நெருள் = திணுங்கிய மக்கள்திரள். "யானை போகிற போக்கைப் பார், பார்க்கப் போகிற நெருளைப் பார்." (பழஞ் சொலவு).

நெர்—நேர். நேர்தல்=1. நெருங்குதல். "வீரவாகுத் தலைவனை நேர்ந்துசொல்லும்" (கந்தபு. தரும கோப. 71. 2. தீண்டுதல். "குழவித் திங்கட் கோணேர்ந் தாங்கு" (பெரும்பாண். 384 . 3. பொருந்துதல். "நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை" (தொல். எழுத். 134 . 4. ஒத்தல். "கனியை நேர் துவர்வாயார்" (திருவாச. 5 : 27 . 5 எதிர்ப்படுதல். "பொழிலோ வொன்று நேர்ந்ததுவே" (வெங்கைக்கோ. 321). 6. எதிர்தல். "வேந்தன் றனைநேர்ந்து காண்பானு" இரகு. தசரதன். 21) 7. எதிர்த்தல். "தானையை நேர்ந்து கொன்று" (கம்பரா. மூலபல. 57). 8. உடன்படுதல். "அழும்பில் வேளுரைப்ப நிறையருத்தானை வேந்தனு நேர்ந்து" (சிலப். 25 : 178). 9. நிகழ்தல். இது தற்செயலாக நேர்ந்தது (உ. வ). 10. நிரம்புதல். "நேரத் தோன்றும் பலரறி சொல்லே" (தொல். கிளவி. 7). 11 பொருத்தனை பண்ணுதல். பழனிக்குக் காவடி யெடுக்க நேர்ந்துகொண்டான். (உ. வ.).

நேர்—நேர்ச்சி=1. நிகழ்ச்சி. 2. நட்பு. "கொடை பகை நேர்ச்சி" (நன். 298).

நேர்த்தம்=1. நட்பு. 2. உடன்பாடு இருவர்க்கும் நேர்த்தமில்லை. (உ. வ.).

நேர்த்தி=1. நேரான நிலை. 2. திருந்திய நிலை. 3. சிறப்பு. 4. பொருத்தனை. நேர்த்திக்கடன். (உ. வ.).

நேர்முகம்=1. எதிர்முகம். 2. உடன்பாடு.

நேர்ப்பு=நேர்த்தி. நேர்ப்பம் = 1. இயற்கை மூலம் (பிரகிருதி). (ஈடு, 8 : 1 : 6). 2. திறமை. "சுழற்றிய நேரப்பம் இருந்தபடி" (திவ். இயற். திருவிருத். 51, வ்யா).

நேர்=1. ஒப்பு. "தன்னே ரிலாத தமிழ்" (தனிப்பாடல்). 2. உவமை. 3. பொருந்திய வரிசை. 4. நேர்நிலை. 5. நேர்மை (நீதி). 6. ஒழுங்கு. 7. ஒழுக்கம். 8. திருந்திய தன்மை. 9. எதிர். 10. தனிமை. (திவா.). 11. உயிர் அல்லது உயிர்மெய் தனித்த நேரசை.

ம., க. நேர், தெ. நேரு, து. நேரெ.

நேர்—நேரம்=1. வினை நேருங் காலப்பகுதி. "நேரம் பார்த்து நெடுந்தகைக் குரிசிலை மீட்டிடம் பெற்று" (பெருங். உஞ்சைக். 57 : 74). 2. தக்க சமையம். (திருக்கோ. 290, துறைவிளக்கம்.) 3. இரு சாமங்கொண்ட அரை நாள். (திவா.).

ம. நேரம், இ. தேர்.

நெள்—நெய். நெய்த்தல்=1. ஒட்டுதல். 2. ஒட்டும் பசைத்தன்மை யுடையதாயிருத்தல். 3. பளபளத்தல். "நீண்டு குழன்று நெய்த் திருண்டு" (கம்பரா. உருக்காட்டு. 57). 4. ஒட்டும் நீர்ப் பொருளாக உருகும் கொழுப்பு வைத்தல், கொழுத்தல். "நெய்த்தமீன்" (W.).

நெய்=1. ஒட்டும் நீர்ப்பொருள் (எண்ணெய்). "நெய் யணி மயக்கம்" (தொல். கற்பியல், 5). 2. ஆவின் அல்லது எருமையின் நெய். "நீர்நாண நெய் வழங்கியும்" (புறம். 166). 3. அந் நெய்யாக உருக்கப்படும் வெண்ணெய். "நெய்குடை தயிரி னுரையொடும்" (பரிபா. 16 : 3). 4. புழுகு நெய். "மையிருங் கூந்த னெய்யணி மறப்ப" (சிலப். 4 : 56). 5. நெய்போ லொட்டுந் தேன். "நெய்க்கண் ணிறுஅல்" (கலித். 42). 6. நெய்போ லுறையும் அரத்தம். "நெய்யரி பற்றிய நீரெலாம்" (நீர்நிறக். 51). 7. நெய்யா உருகுங் கொழுப்பு. "நெய்யுண்டு" (கல்லா. 71). 8. உளம் ஒட்டும் நட்பு. "நெய் பொதி நெஞ்சின் மன்னர்" (சீவக. 3049).

ம., க. நெய், தெ. நெய்யி. வ. ஸ்நிஹ்—ஸ்நேஹ

எண்ணெய்=1. எள்ளிலிருந் தெடுக்கப்படும் நெய் (நல் லெண்ணெய்). 2. நெய்ப்பொருள், விளக்கெண்ணெய், தேங்கா

யெண்ணெய், புன்னைக்கா யெண்ணெய், கடுகெண்ணெய், பாம்பெண்ணெய் முதலியன.

நெய்ப்பொரு ளெல்லாவற்றுள்ளும் ஆவின் அல்லது எருமையின் நெய் ஊட்டமான உணவிற்குரியதாய்த் தலைசிறந்த தாதலால், நெய்யென்னும் பொதுப் பெயரையே சிறப்புப் பெயராகக் கொண்டது.

முதன்முதலாக எள்ளின் நெய்யைக் குறித்த எண்ணெய் என்னுஞ் சொல், மிகப் பெருவழக்காய் வழங்கியதால் நாளடை வில் தன் சிறப்புப் பொருளை யிழந்து, நெய்யல்லாத நெய்ப் பொருள்களின் பொதுப்பெயராயிற்று. அதனால், தன் பழம் பொருளைக் குறித்தற்கு 'நல்' என்னும் அடைபெற்றது. இதனால், நெய்க்கு அடுத்துச் சிறந்தது நல்லெண்ணெய் என்பது பெறப்படும். "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணிய னுக்குக் கொடு" என்பது பழமொழி.

நெய்த்துவர் — நெய்த்தோர் = நெய்ப்பதமுள்ள அல்லது நெய்போ லுறையும் அரத்தம். "நெய்த்தோர் வாய.....குருளை" (நற். 2).

துவர் = சிவப்பு, அரத்தம்.

தெ. நெத்துரு, க. நெத்தரு.

நெய்—நேய்—நேயம் = 1. நெய். (பிங்.). 2. எண்ணெய். (பிங்). 3. அன்பு. "நேயத்ததாய் நென்ன லென்னைப் புணர்ந்து" (திருக்கோ. 39). 4. பத்தி (தெய்வப்பற்று). "நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி" (திருவாச. 1 : 13).

பிரா. நேஅம், வ. ஸ்நேஹ.

நேயம் — நேசம் = 1. அன்பு. "நேசமுடைய வடிய வர்கள்" (திருவாச. 9 : 4). 2. ஆர்வம். "வரும்பொரு ளுணரு நேச மாசறு தயிலம் பாக்கி" (இரகு. இரகுவு. 38). 3 தகுதி. "பூச்சியின் வாயினூல் பட்டென்று பூசைக்கு நேசமாகும்" (குமரே. சத. 59). ம. நேசம்.

நேசம்—நேசி. நேசித்தல் = 1. அன்பு வைத்தல். "நேசிக் கும் சிந்தை" (தாயு. உடல் பொய். 32). 2. ஆர்வங் கொள்ளு தல். "நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்" (தாயு. பரிபூர. ).

நேசி = 1. அன்பன். 2. காதலி.

நேயம்—நேம் = அன்பு.

நேம்—நே = 1. அன்பு. 2. ஈரம். "நேஎ நெஞ்சின் கவுரியர் மருக" (புறம். 3).

நெய் — நெய்ஞ்சு—நெஞ்சு = 1. அன்பு செய்யும் மனம். "தன்னெஞ்சே தன்னைச் சுடும்" (குறள். 293). 2 மனத்திற் கிருப்பிடமான நெஞ்சாங்குலை (இருதயம்). 3. நெஞ்சாங்குலை யுள்ள மார்பு "தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇ" (தொல். எழுத். 83). 4. மனச்சான்று. "நெஞ்சை யொளித் தொரு வஞ்சக மில்லை." (கொ. வே. 54). 5. நடு. "குன்றி னெஞ்சுபக வெறிந்த" (குறுந். 1). 6. திடாரிக்கம். "நெஞ் சுளோ ரஞ்சும் வித்தை" (திருவாலவா. 35 : 17).

ஒ. நோ : வேய்ந்தன்—வேந்தன். ம. நெஞ்சு.

நெஞ்சு—நெஞ்சம் = 1. மனம். "தாமுடைய நெஞ்சந் துணையல் வழி" (குறள். 1299). 2. அன்பு. "நெஞ்சத் தகநக நட்பது நட்பு" (குறள். 786).

நெஞ்சு—நெஞ்சகம் = மனம். "நெஞ்சக நைந்து நினைமி னொடோறும்" (தேவா. 1173 : 1).

நெய்தல் = நூலை ஆடையாக இணைத்தல். "நெய்யு நுண் ணூல்" (சீவக. 3019). 2. தொடுத்தல். "நெய்தவை தூக்க" (பரிபா. 19 : 80).

ம. நெய்க, க. நெய்.

நெய் — நெயவு—நெசவு.

நெய்—நெய்தல் = 1. வறண்ட கோடைக் காலத்தும் குள நிலத்தோ டொட்டியிருக்கும் கொடி வகை.

"....................அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு" (மூதுரை. 17).

௨. அக்கொடி வளரும் கடற்கரை. "எற்பாடு நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்" (தொல். அகத். 8).

ம., க. நெய்தல்.

---

# இளநீர்

## (ஒரு சொல்லாராய்ச்சி)

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

மரஞ் செடி கொடிகள் பண்டையில் தோன்றிய இடத்தையும் அவை பல நாடுகளுக்குப் பரவிய வழிகளையும் ஆராய்ந்த அறிவியல் அறிஞர்கள் தென்னைமரம் பசிபிக் தீவுகளில் தோன்றிய தென்றும் கடல் வழியாக மலேயா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்குப் பரவியதாகவும் கருதுகின்றனர். இலங்கையிலிருந்து இந்தியாவிற்குத் தென்னைமரம் பரவியதாக அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். தமிழில் தென்னைமரத்திற்கு வழங்கும் பெயர்களும் இந்தமரம் வெளிநாட்டிலிருந்து வந்ததைக் காட்டுகின்றன. தென் என்ற திசையைக் குறிக்கும் சொல்லிலிருந்தே தென்னை என்ற பெயர் தோன்றியது. தென் திசையிலிருந்து வந்த, தென் கடல் வழியாகத் தமிழகத்துக்கு வந்த ஒரு மரமே தென்னை என்று பெயர் பெற்றது. தென்னவன் என்பது தென் திசையில் வாழ்ந்த பாண்டியர்க்குப் பெயராக வந்ததுபோல் இந்த மரத்திற்கும் பெயர் தோன்றியது. தெங்கு என்ற பெயரும் தென்+கு என்றே பகுக்கப்பட வேண்டும். 'கு' என்ற எழுத்து திசையைக் குறித்துத் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய சொற்களில் விகுதியாகப் பயில்வதைக் காணலாம். மயிலைநாதர் நன்னூலுரையில் தெங்கு என்ற சொல்லைப் பகாப்பதம் என்று கொண்டாலும் தென் என்பதே தெங்கு என்பதின் மூலச்சொல். தென்திசையிலிருந்து வந்த மரம் என்பதாலேயே தெங்கு என்று பெயர் பெற்றது. புன்கு என்ற மரப்பெயர் புங்கு, புங்கம் என்று மாறினது போல் தென்கு என்ற மரப்பெயர் தெங்கு, தெங்கம் என்று மாறிற்று. தெங்கு என்ற பெயர் பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, புறநானூறு ஆகிய சங்க நூல்களில் வழங்கினும் அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய சங்க நூல்களில் வழங்காமை குறிப்பிடத்தக்கது. சங்க நூல்களில் மிகப் பழைய பாடல்களில் தெங்கு குறிப்பிடப்படவில்லை என்றே கருத வேண்டும். ஆதலின் தென்னைமரமானது தமிழகத்திற்கு வந்த காலம் கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டிற்குச் சிறிது முன்னர் இருந்திருக்கலாம். இருப்பினும் தென்னைமரம் சேர நாடும் சேர்ந்த அன்றைய தமிழகத்தில பரவலாகக் காணப்படவில்லை. அதனுல்தான் சங்க காலத்தில் அகப்பாடல்களில்

பாடப்படவில்லை. திணைப்பாகுபாட்டில் கருப்பொருளாகக் கூறப்பட்ட மரங்களில் தென்னை கூறப்படவில்லை: அன்றைய சேர நாட்டுக் கடற்கரையில் இன்று காணப்படுவது போல் தென்னை மரங்கள் இருந்திருந்தால் நெய்தல் திணைக் கருப் பொருளாகக் கூருது விடுவரா? மிகப் பிற்காலத்து இலக்கண ஆசிரியர்கள் கூடப் பழைய இலக்கண மரபைப் பின்பற்றி நெய் தல் திணையில் தென்னையைக் கூருது போயினர்கள். இஃது எதைக் காட்டுகின்றது? தென்னைமரம் தமிழ்நாட்டிற்கு வெளி நாட்டிலிருந்து வந்ததென்பதும், அதனல் தமிழ்நாட்டின் திணைக் கருப்பொருளாகக் கருதப்படவில்லை என்பதும் தெரி கின்றன.

மிகப் பழைய இலக்கணமாகக் கருதப்படும் தொல்காப் பியம் பனைமரத்தைக் குறிப்பிடுகின்றதே யொழியத் தென்னையைக் குறிப்பிடவில்லை. பனைக்குச் சொல்லிலக்கணம் கூறிய தொல் காப்பியர் தெங்குக்கு ஏன் சொல்லவில்லை? அவர் காலத்தில் தெங்கு தமிழகத்தில் இலக்கணத்தில் கூறுமளவு, பரவலாக வில்லை என்று கருதலாம். இடைச் சங்க காலத்தில் குமரிக் குத் தெற்கில் ஏழ்தெங்க நாடு, ஏழ்பனை நாடு முதலிய நாடுகள் கடலில மூழ்கியதாகக் கூறியது தென்னை தமிழகத்தின் தெற்கிலிருந்து வந்ததைக் குறிப்பிடும் ஒரு நினைவுக் கதை யாகும். சேர மன்னர்க்கு அடையாளப்பூவைப் பனையென்று சங்க நூல்கள் கூறும். தென்னைமரம் இன்று காணப்படுவது போல அன்று சேரநாட்டில் மிகுதியாக இருந்திருந்தால் பனந் தார் சேரமன்னரின் அடையாளப்பூவாக இருந்திருக்க முடியாது. இன்று பனைமரத்தை விடத் தென்னைமரந்தான் கேரளத்தில் மிகுதியாக உள்ளது. கேரளம் என்ற பெயரைத் தென்னையைக் குறிக்கும் வட சொல்லிலிருந்து வந்ததாகக் கூறுவது அறிவியலுக்கு ஒவ்வாத (unscientific) ஆராய்ச்சி ஆகும். கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் தோன்றிய அசோக மன்னர் கல்வெட்டிலேயே 'கேரளம்' என்று சேரநாட்டின் பெயர் வருகின்றது. இதற்கு முன்னரே சேரநாட்டில் தென்னை மரம் காணப்பட்டதற்கோ, பரவலாக இருந்ததற்கோ சிறிதும் சான்று சங்க நூல்களில் இல்லை. ஆதலின் கேரள அறிஞர்கள் இன்றும் இந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதிவருவது வருந்தத்தக்கதாகும்.

தென்னைமரம் தமிழகத்தில் மிகுதியாகப் பரவியது பல்லவர்கள் காலத்தில் என்று கருத இடமுண்டு. இலங்கைத் தீவிலிருந்து வந்த ஈழவர்களால் தென்னை பரவலாக பயிரிடப் பட்டது. முக்கியமாகக் கள்ளெடுப்பதற்காகவே பயிரிடப்பட்டது.

சங்க நூல்களில் பனங்கள்ளைப் பற்றியும் ஈச்சங்கள்ளைப் பற்றியும் செய்திகள் கூறப்பட்டிருப்பினும் தென்னை மரத்தில் கள்ளிறக்கப்பட்டதாக ஒரு குறிப்பும் இல்லை. இதுவும் தென்னை சங்க காலத்தில் பரவலாகத் தமிழகத்தில் இருந்ததில்லை என்பதைக் காட்டுகின்றது. சங்க காலத்தில் இயற்கையாகத் தமிழகத்திற்கு வந்த தென்னைமரம் பல்லவர்கள் காலத்தில் ஈழவர்களால் தோட்டங்களில் கள்ளிறக்குவதற்காகப் பயிராக்கப் பட்டதாகத் தெரிகின்றது. ஈழவர்களுக்குக் கள்ளிறக்கும் உரிமை கொடுக்கப்பட்டு வரி இடப்பட்டது. தென்னையைப் பயிரிடவும், கள்ளிறக்கவும் தனித்தனி வரி இருந்தது. ஈழம்பூட்சி என்ற வரி ஈழவர்கள் மேல் ஆள்வரியாகப் போடப்பட்டது. இன்றும் கேரளத்தில் ஈழவர்கள் கள்ளிறக்கும் தொழிலாளர்களாக உள்ளனர். தென்னையில் கள்ளிறக்கும் தொழிலைத் தமிழகத்துக்குக் கொணர்ந்தவர்கள் இலங்கையிலிருந்து வந்த ஈழவர்கள் என்று கருதவேண்டும். இதனாலேயே பிற்காலத்தில் ஈழம் என்ற சொற்குக் கள் என்ற பொருளும் வந்தது. தெற்குத் திசையில் இருந்து வந்த தென்னைமரம் தமிழகத்திற்கு இலங்கைத் தீவிலிருந்தும் வந்திருக்கலாம் என்று அறிவியல் அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். ஈழவர் தமிழகம் வந்து தென்னையைப் பரப்பினர் என்ற செய்தியும், தெற்கிலிருந்து தென்னைமரம் வந்ததும் தென்னை என்ற பெயர் தோன்றின காரணத்தை வலியுறுத்தும். தென்னை என்ற பெயர் சங்க நூல்களிலும் சங்கம் மருவிய நூல்களிலும் வழங்கவில்லை. பல்லவர்கள் காலத்திற்குப் பிறகுதான் இப் பெயர் வழங்கியதாகத் தெரிகின்றது.

இளநீர் என்ற பெயர் சங்க நூல்களில் புறநானூற்றில் (23) ஒரே ஒரு பாடலில் மட்டும் வருவது குறிப்பிடத்தக்கது. பெரும்பாணாற்றுப்படையில் ''வீழில் தாழைக் குழவித் தீநீர்'' (357) என்றொரு வரி வருகின்றது. குழவித் தீநீர் என்பதற்கு இளநீர் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இளநீர் என்ற பெயரையே 'குழவித் தீநீர்' என்று சுவையோடு கூறியதாகத் தெரிகின்றது. ''குழவும் மழவும் இளமைப் பொருள'' என்று தொல்காப்பிய மரபியல் சொல்லியுள்ளது. ஆனால் இளநீர் என்ற பெயரில் வரும் நீர் என்ற சொல் 'நியர்' என்ற ஆசிய-ஆஸ்திரேலிய மொழிக்குடும்பச் சொல்லிலிருந்து வந்தது என்று கருத இடமுண்டு. பிரிஸ்லஸ்கி (Prysluski) என்ற மொழிநூலறிஞர் ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் முற்பட்ட மொழிகளை ஆராயுங்கால் தென்னைக்கு வழங்கும் நாரிகேலா என்ற வடமொழிப் பெயர் 'நியர்கொலை' என்ற ஆஸ்டிரிக் மொழிச் சொற்களிலிருந்து வந்ததாக எழுதியுள்ளார். நியர் என்பது

தென்னையையும் கொலை என்பது பழத்தையும் குறிக்கும் என்று கூறினர். இன்று நியுகினித் தீவு என்ற பசிபிக் தீவின் பெயரில் நியு என்பது தென்னை மரத்தையும் கினி என்பது நிற்பதையும் குறிக்கின்றது. நியுகினித்தீவில் வழங்கும் ஆஸ்டிரிக் மொழிகளில் இப் பெயர் தென்னையைக் குறிக்கப் பரவலாக வழங்குகின்றது. இப் பெயரே வடமொழியில் நாரிகேலா என்ற பெயரிலும் தமிழில் இளநீர் என்ற பெயரிலும் காணப்படுகின்றது. பப்புவன் என்ற பசிபிக் தீவு தமிழர்க்குத் தெரிந்ததேயாகும் என்பதற்கு மயிலைநாதர் உரையில் சான்று உள்ளது. யானையின் சாதிகளைக் குறிப்பிடுவதாக அருமனவன், பப்புவன் என்ற பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. பப்பரவன் என்ற பாடம் இருப்பினும் பப்புவன் என்பதுதான் பொருத்தமானது. யானைகளில் பர்மா யானை, நியுகினித் தீவுயானை ஆகியவை தனித்த சாதிகளாக விலங்கியலார் கூறுவர். வாவிலாவ் (Vavilov) என்ற உருசிய அறிஞரும், கண்டோல் (Condolle) என்ற அறிஞரும் தாங்கள் எழுதிய நூல்களில் தென்னையின் தொன்மைப் பிறப்பிடம் பசிபிக் தீவுகள் என்று கூறியுள்ளனர். ஆதலின் பசிபிக் தீவிலிருந்து தோன்றிப் பரவிய ஒரு மரத்திற்கு அத் தீவுகளில் தொன்மைக் காலத்தில் வழங்கிய பெயரான நியு, நீ என்ற ஆஸ்டிரிக் மொழிப் பெயரே முண்டா மொழிகளின் வாயிலாகப் பரவி வடமொழியில் 'நியர்' ஆகவும் தமிழில் 'நிர்' ஆகவும் வழங்கியதென்று கருதலாம். இளநீர் என்ற பெயர் பசிபிக் தீவுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறி இங்கு மூத்த குடிகளாயிருந்த முண்டர்கள் போன்ற ஆஸ்டிரிக் இனத்தாரின் மொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். 'நியர்' என்ற முண்டா மொழிப் பெயருடன் 'இளம்' என்ற தமிழ்ச் சொல் சேர்ந்து 'இளநீர்' என்று மக்கள் வாயில் (Folk Etymology) பயின்றதாகக் கருதவேண்டும். ஆனால், இளநீரில் வரும் 'நீர்' என்ற சொல்லைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு தேங்காயில் இருந்த நீரைக் குறிப்பதாகச் சங்க காலத்திலேயே கருதினர். வேறு எந்த மரங்களின் காய்களையோ, பழங்களையோ 'இளநீர்' என்று குறிப்பிடாதபோது தென்னையின் காயை மட்டும் குறிப்பிட்டது தொன்றுதொட்ட மரபின் வழியன்று. இதுவும் இப் பெயர் வெளியிலிருந்து வந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. தென்னையை 'வீழில் தாழை' என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. கடற்கரையில் கண்ட வீழ் இருக்கும் தாழையைப் போல், கடற்கரையில் தாழ இருக்கும் தென்னையை வீழ்அற்ற தாழை என்று அழைத்தனர். வெளி நாட்டிலிருந்து வரும் செடிகளுக்கு உள்நாட்டுச் செடிகளோடு ஒப்பிட்டுப் பெயர் படைத்தல் மொழி மரபாகும். வளைந்து

கொடுக்கும் வஞ்சிமரக் கொம்புபோல் வளைந்து கொடுக்கும் கொம்பையுடைய வெளிநாட்டு மரமான சவுக்கு மரத்தைத் தஞ்சைப் பகுதியில் 'வஞ்சி' என்று இன்று அழைப்பதைக் காணலாம். உள்நாட்டுத் தாழையொடு தென்னையை ஒப்பிட்டுக் கூறியதால் தென்னை வெளிநாட்டிலிருந்து வந்தது தெரிகின்றது. துளுமொழியில் தென்னையை இன்றும் 'தாறே' (தாழை) என்றழைப்பதைக் காணலாம்.

தெங்கு, தென்னை என்பன காரணப் பெயர்களாகத் தோன்றின. இளநீர் பிறமொழியிலிருந்து வந்தது. தாழை என்ற பெயர் ஒப்புமை காரணமாகத் தோன்றியது. இக் காரணப்பெயர்கள் பண்டைத் தமிழகத்தில் தென்னை வெளிநாட்டிலிருந்து வந்ததைக் காட்டுகின்றன.

மேற்கோள் நூல்கள் :

1. Pre-Aryan and Pre-Dravidian in India - Prysluski.

2. An introduction to the botony of Tropical crops-Leslie S. Cobley.

3. De Condolle. A, 1884, Origin of cultivated plants-Kegan Paul Trach & Co., London.

4. Vavilov V. I. (1926) The origin, variation, immunity and breeding of cultivated plants-Chrenica Botanica 13 (16) 1949-50.

---

## நன்றி மறவாமை

*நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல் எனவேண்டா—நின்று*
*தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்*
*தலையாலே தான்தருத லால்.*

Since the tall up-standing and flourishing cocoanut gives at the top what it has taken at the foot, need one, who has done any good, ask when there would be a return therefor?

**—Ten Tamil Ethics—Pages-54**
**(Muthurai)**

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

**[கவியோகி சுத்தானந்த பாரதியார்]**

(முன் இதழ் உஎசு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 11. ஆப்பிரிக்கத் தமிழர் வாழ்த்து

டர்பானில் தனித் தமிழ் ஆர்வம் பொங்கித் ததும்புகிறது. பல சங்கங்கள் எழுந்து தமிழையும் சைவத்தையும் வளர்க்கின்றன. சைவசித்தாந்தக் கழகம், அருட்பாக் கழகம், தமிழ்வேதக் கழகம், தமிழர் குழுவம் (Tamil Federation), தமிழிசைக் கழகம், திருக்குறள் கழகம், வைதிக சைவக் கழகம் ஆகிய பல கழகங்கள் என்னை வரவேற்றுச் சிறப்புச் செய்தன. ஒவ்வொன்றிற்கும் பெரிய பெரிய மன்றக் கட்டிடங்கள் உள்ளன. இவையன்றி, வைத்தீசன் கோவில், சிவன் கோவில், முருகன் கோவில், பெருமாள் கோவில், வள்ளலார் கோவில், இராமர் கோவில், கண்ணன் கோவில், மாரியம்மன் கோவில் முதலிய கோவில்களெல்லாம் என்னை வரவேற்றன. பள்ளிக்கூடங்கள் எல்லாம் வரவேற்றன.

குஜராத்திகளும், மார்வாடிகளும் மன்றமும் கோவிலும் அமைத்துக் கீதையும் வேதமும் ஓதிப் பணி செய்கின்றனர். தெய்வநெறிக் கழகத்தார் ஆரிய சமாஜிகள் இராமகிருஷ்ண அடியார் ஆகியோர் மாளிகை கட்டி, மலர் வெளியிட்டு, வேள்வி நடத்தி, இசை முழக்கத்துடன் வேத தருமத்தைப் பரப்புகின்றனர். எல்லாச் சங்கங்களும் ஆர்வமுடன் விளம்பரங்கள் செய்து என்னை வரவேற்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சங்கம் அல்லது கோவில் வரவேற்பளித்தது. இசைக் கருவிகளுடன் நான் பேசுவதெல்லாம் நாடாப்பதிவாயின. பதிவு செய்ததைக் கேட்பதற்கே, மறுநாள் ஏராளமான மக்கள் கூடுவதுண்டு. இவர்களுக்கு முறையாகத் திருமந்திர விளக்கம் செய்தேன். நாயன்மார் வரலாறுகளைச் சொன்னேன். சைவ சித்தாந்த சாதனத்தைச் செய்து காட்டினேன். எனது தமிழிசைப் பாடல்களைப் பயிற்றி, கூட்டத்தில் முழங்கச் செய்தேன். டர்பான் தமிழருக்கு அளவு கடந்த தமிழ்ப்பற்று உள்ளது. அவர்களுக்குத் திருக்குறள் பண்பாட்டை விளக்கினேன். திருக்குறள் விழா கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. எனது ஆங்கில மொழிபெயர்ப்பை (Tirukkural Couplets) எல்லாரும் எழுதிக்கொண்டு படித்தனர். அதை அழகாக வெளியிட்ட சைவ சித்தாந்தக் கழகத்தை வாழ்த்தினர்.

இவ்வளவு தமிழ் ஆர்வமுள்ள தமிழருக்கு நல்ல தமிழ் வளர ஐந்து பாட நூல்கள் (Learn Tamil Series) எழுதி வருகிறேன்.

**தனித்தமிழ்க் கூட்டம்**

ஒருநாள் தனித் தமிழ்க் கூட்டம் நடந்தது. இசைக் கருவிகள் நன்றாக அமைந்தன. என் இசைப் பாடல்களை ஒரு மணி நேரம் பாடித் தமிழ் உணர்ச்சியை ஊக்கினேன். தமிழ் நாட்டில் எனக்குக் கிடைக்காத நல்ல வாய்ப்புகள் பிறநாடுகளிலே நிரம்பக் கிடைத்தன.

கூட்டத்தில் ஒரு பெரியாரிடமிருந்து ஒரு விண்ணப்பம் எழுதி வந்தது. "தென்னாப்பிரிக்காத் தமிழரைப்பற்றி இப்போதே ஒரு பாட்டுப்பாடவேண்டும்" என்று அதில் இருந்தது. இந்தப் பாடல் அப்போது எழுந்தது—நான் ஒருவரி பாடியதும் எல்லாரும் அதையே திருப்பிப் பாடினர்.

**வெண்பா**

*மண்ணைப்பொன் னாக்கவல்ல வண்மைத் தமிழன்பர்*
*கண்ணைப்போ லென்னைமிகக் காத்தனரே—பண்கடலார்*
*சீரார் †தருவான் சிறப்பையே பேசுவேன்*
*பாரா மகிழப் பரிந்து.*

(†தருவான் = டர்பான்)

*தாளாண்மை மிக்க தமிழர் மரபென்றும்*
*வேளாண்மை செய்யும் வியன்புரியாய்—ஆளும்*
*தருப்பானி லேயென்றும் தங்கியிச் சீவன்*
*இருப்பானே எங்கிருந்து மே.*

**புன்னாகவராளி-ராகம்] வாழியவே [ஆதிதாளம்**

*வாழிய வாழியவே—நீடு—வாழிய வாழியவே*
*ஆழியும் வானமும் போல்—எங்கள் அன்புத்தமிழர்குலம்*
*குழுதக்கடலோரம்—செல்வம்—கொழிக்கும் தருப்பானில்*
*அமுதத்தமிழர்குலம்—என்றும்—ஆக்கம் பெருகுகவே*
*—தொழில்*
*ஊக்கம் பெருகுகவே*

*தாய் நிலத்தைத் துறந்தும்—அன்புத்—தமிழைத் துறவாதார்*
*தூய நல்லின்புறவே—நீடு—துலங்குக நலம் பெறவே*
*தென்னாப்பிரிக்கவயல்—பசுர்—தேன் பொழிலாகிடவே*
*தென்னாட்டுத்தமிழர்—வேர்வை—சிந்தியுழைத்தனரே*

கரும்புத் தோட்ட மெங்கே—இங்கே—கட்டித் தங்கமெங்கே
விரும்பித் தமிழரிங்கே—நாளும்—வேலை செய்யா விடினே!

தங்கமணிச் சுரங்கம் இங்கே—தழைத்துச் செழிப்ப
தெல்லாம்

சிங்கமணித் தமிழர்—தினம்—சிந்திய வேர்வையினுல்
இரவு பகலாக—இங்கே—இரத்தப் பாடுபட்டே
கரவா துழைத்தவரை—எண்ணில்—கண்ணீர் பெருகுதம்மா.

[மோகனராகம்—முத்தாளம்]

எத்தனையோ சிறுமை—அந்தோ—எத்தனையோ கொடுமை
அத்தனையும் பொறுத்தார்—பழனி—ஆண்டவனை நினைத்தார்
காந்திக்குக் கை கொடுத்தார்—நல்ல—கடமைக்கு மெய்
கொடுத்தார்
சாந்தக்கலை வகுத்தார்—எங்கள்—தாயின் விடுதலைக்கே.

தமிழர் உழைப்பாலே—மிகத்—தழைத்த பொன்னுட்டில்
தமிழர் உரிமையுடன்—வாழச்—சக்திவேல் அருள்க!
முப்பாலுண்டவர்கள்—உண்மை—முப்பொருளறி தமிழர்
எப்பால் உலகினிலும்—இவர்—இன்புற ஓங்குகவே!

தெய்வத்தமிழ் வீரர்—தூய—சைவத்தமிழ் வீரர்
கைவைத்த நற்கனிபோல்—மெய்—கண்ட தமிழ் வீரர்
வடிவேல் சிவமுருகன்—அருள்—வாய்த்த பெருந்தமிழர்
படிமேல் இசை பெருகி—நீடு—பரவுக பல்லாண்டே.

வாழிய வாழியவே—என்றும்
வாழிய வாழியவே
ஆழியும் வானமும் போல்—எங்கள்
அன்புத் தமிழர் குலம்—தூய
இன்பத் தமிழர் குலம்

வாழிய வாழியவே—தமிழ்
வாழிய வாழியவே—சிவனருள்
சூழிய சூழியவே.

இவ்வாறு பாடிய பிறகு "தலைநிமிர் தமிழா" என்ற பாட்டை எல்லாரும் எழுந்து நின்று கூட்டமாகக் குரல் எடுத்துப் பாடினர். தமிழ்வேத சங்கத்தார் சிறந்த கலை விருந்து நடத்தினர். அதில் குயில் மாணிக்கம் தமது குழுவுடன் என் பாட்டைப் பாடி மன்றத்தை மகிழ்வித்தார். ஜெயலட்சுமி மாணவிகள் நாட்டிய மாடினர். இனி அருட்பாக் கழகத்துக்குச் செல்லுவோம்.

**அருட்பாக் கழகம்**

டர்பானில் எங்கும் சங்கம்; எங்கும் கலை வெள்ளம்; எங்கும் கோயில்! எங்கும் திருவிழா!

அருட்பாக் கழகம் காண்போம். இங்கே கண்டறியாதன கண்டேன். வள்ளலாருக்கு உள்ளாரப் பணிசெய்யும் உள்ளன்பரைக் கண்டேன். இக் கழகம் வள்ளலாருக்குச் செய்த வியன் பணிகள்முன் வியந்து நிற்கிறேன்.

**கதிரைவேற் பிள்ளை**

நான் சிறுவயது முதல் அருட்பாலை அருந்தினேன். மகாதேவ மாலையை மாந்தினேன். கதிரைவேற் பிள்ளையின் வெறுப்புக்கும் ஒருமுறை மறுப்பளித்தேன். என் தமிழ் ஆசிரியர் தெய்வசிகாமணிப் புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் அரிய நண்பர். அவருடன் திருவாவடு துறை மடத்திற் பயின்றவர். அவரே கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளை வள்ளலாரிடம் அழைத்து வந்தவர். தொழுவூர் வேலாயுத முதலியாருடன் சேர்ந்து அருட்பா நான்கு திருமுறைகளை வெளியிடத் துணை நின்றவர். ஒருநாள் அருட்பா படித்துக் கொண்டிருந்தபோதே யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை வந்து, என்னைப் பார்த்து "தேவாரமே அருட்பா" என்றார். "அருட்பாவும் தெய்வத்திற்குச் சூட்டிய ஆரமே" என்று சில பாடல்கள் பாடினேன். அருட்சுடர் விளக்கு எவர் ஏற்றினாலும் வெளிச்சம் ஒன்றே என்றேன். உலகம் உய்ய வந்த ஒளிமணி வள்ளலின் ஒருமைப்பாட்டை ஓதினேன். அவர் பேச்சை இலக்கணத்தின் பால் திருப்பி என்னைக் கேள்வி கேட்டார்; விடை கூறினேன். "நல்லது; தமிழ் படியும்; திருவாசகம் ஓதும்" என்று சென்றார் கதிரைவேற் பிள்ளை.

**வடலூர் சமாஜம்**

நான் ஆங்கிலத்திலும் தமிழிலும் வள்ளலாரைப் பற்றிப் பல நூல்கள் எழுதினேன்; உலகம் அறியும். வடலூரில் நானும் ஓ. பி. ராமசாமி ரெட்டியாரும் சுத்த சன்மார்க்க நிலையம் நாட்டிக் குருகுலமும் நடத்தினோம். வள்ளல் இராமலிங்கத்தின் அருட் பணியை இன்று வள்ளல் மகாலிங்கர் தொடர்ந்து நடத்தி வருகிறார். மிக்க மகிழ்ச்சி. எனது தவத்திற்காக அங்கே **யோக சமாஜம்** அமைத்து அருட்பா ஆராய்ச்சியும் திருமந்திர ஆராய்ச்சியும் நடத்திக் கொண்டிருந்தேன். நான் தனியாக சமாஜம்

நடத்துவது பிடியா தார் எனக்குத் தந்த தொல்லைகளுக்கு எல்லை யில்லை. நான் உயிர் பிழைத்ததே சிவனருளாலேதான்.

வடலூர் வடதிசையில் வள்ளல் என்னுள்ளத்தில் அமர்ந்து பல அரிய சித்திகளைத் தந்தார். சில அன்பர் இருபாலாரும் பாரத சக்தி மகாகாவியத்தையும் வேதாகம நூல்களையும் என்னிடம் பாடம் கேட்டனர். சிலர் திருமந்திர சாதனம் செய்தனர். ஆனால் பொருமைச் செருக்கு செய்த பொல்லாங்கு பொறுக்க முடியவில்லை. நான் தியானம் செய்த மாடிக் குகை யில் நல்ல பாம்பைக் கொண்டு விட்டனர். பாம்பு என் காலைச் சுற்றியிருந்து சென்றது. என் நூல்களைக் கிழித்தெறிவது, சமாஜ வேலியை அழிப்பது, சமாஜ வாசலில் முள் அடைத்து வெளியே செல்வதைத் தடுப்பது, கண்டபடி அவதூறுகளைப் பரப்புவது—இவ்வாறு பல தொல்லைகள் என்னைச் சோதித்தன. ஆதலால் பூதானத்திற்குப் பத்து ஏக்கர் தந்துவிட்டு மீதியிருந்த முந்திரித் தோப்பை எவர் பொது நலம் செய்தாலும் நுகரட்டும் என்று விட்டொழித்துச் சென்னையில் யோகசமாஜம் அமைத்துத் தவமும் அறிவாராய்ச்சியுமாயிருக்கிறேன். ஆண்டவன் எனக் கீந்த பணியை முடிப்பதற்கே என் ஆயுள் சரியாயிருக்கும். வள்ளலார் வரலாற்றை St. Ramalinga And His Revelation என்ற ஆங்கில நூலாக வெளியிட்டேன். ஜோதி இராமலிங்கம் என்ற நாடகம் எழுதி நடிக்கச் செய்தேன். அருட்பா முழக்கம், அருட்சோதி வள்ளலார், ஜோதி தரிசனம் முதலிய நூல்களும் வந்தன. எனினும் நான் விரிவாக அருட்பாப் பணி புரிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆதலால் மௌனத் தவத்தில் ஆழ்ந்து ஆண்டவன் அருளைப் பாடி நிட்டை கூடினேன்.

## அருட்பாக் கழகப் பணி

டர்பான் அருட்பாக் கழகமே எனக்கு நல்ல வாய்ப்பை அளித்தது; திருமதி நாகவல்லி, யோகவல்லி, S. V. ஐயர்—ஆகியோர் அருட்பாக் கழகம் நாட்டி அற்புதமான பணி நலம் பரவுகின்றனர். அருட்பா மன்றம் ஒன்று 2000 பேர் அமரும்படி யாக இக் காலத்திற் கேற்றபடி அழகாக அமைத்துள்ளனர்; இராமலிங்கருக்கு பிங்கோவில் பெரிய கோவில் எழுப்பியுள்ளனர். இக் கழகத்தார் என்னை மிகச் சிறப்பாக வரவேற்றனர். எனது St. Ramalingam என்ற நூலை 3000 பிரதிகள் அழகாக அச்சிட்டு நாடெங்கும் சும்மா வழங்கினர். பெரும் பெரும் கூட்டம் கூட்டி என்னை வரவேற்று அருட்பா - வள்ளலின் அற்புதக் கதையை இசையுடன் விளக்கம் செய்யப் பல வாய்ப்புகளைத் தந்தனர், எனது ஜோதி இராமலிங்கத்தை அரங்கேற்றினர்.

கூட்டத்திற்கு வெள்ளையரும், கிறிஸ்துவரும், பல வகுப்பினரும் வந்திருந்தனர். அருட் பெண்டிர் இருபுறமும் மலர் தூவி வரவேற்றனர். அலங்கார மேடைமேல் வள்ளலார் திருவுருவம் அழகாகப் பொலிந்தது; கற்பூரச் சுடர் தியானம் நடத்தி, அருட்சோதி யிசை முழக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. இன்னிசைக் கருவிகள் இனிது மிழற்றின. "வள்ளலின் உள்ளத் துடிப்பு" என்ற பொருள்பற்றி இசைச் சொற்பொழிவாற்றினேன். அருட்பாக்களைத் தமிழிற் பாடியதும், ஆங்கிலத்திலும் விளக்கினேன்; இரண்டரை மணி நேரம் இசைச் சொற்பொழிவு நடந்ததும், அருட்பாக் கழகத்தார் கலைவிளையாடல் காட்டினர். அடடா அந்த ஒளி நடனம் ஒன்றே போதும்! கண்டறியாதன கண்டேன். அருட்பாக் கழகத்துப் பெண்டிர் கைகளில் மெழுகுத் திரி விளக்கேந்தி "அருள் விளக்கே அருட் சுடரே" "அருட்சோதித் தெய்வம்" முதலிய பாடல்கள் முழங்க வளைந்து வளைந்து சாரிதிரிந்து இன்ப நடனமாடி எல்லாரையும் மகிழ்வித்தனர். திரு. நாகவல்லியம்மையார் என் மடியில் வள்ளலார் திருவுருவை வைத்துப் படம் பிடித்தார்; அதில் கழக அன்பர் அனைவரும் இருந்தனர்.

பா விருந்திற்குப் பிறகு நா விருந்து நடந்தது. வகைவகையான சைவ உணவுகளை அவரவர் எடுத்துண்டனர். நான் கனிச்சாறு தேனுடன் கலந்து பருகினேன்.

### அருட்பாக் கழகச் சிறப்பு

அருட்பாக் கழகத்தின் தனிச்சிறப்பு இதுவே; சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டே அது வள்ளலார் உள்ளத்தை வெளியிடுகிறது. அருட்பாவுடன் தேவாரமும் திருவாசகமும் முழங்குகின்றன. ஆடல் பாடல் அழகுக் கலைகள் எல்லாம் அங்கே ஆர்வமுடன் வளர்கின்றன. மாலைதோறும் அருள் வழிபாடு நடக்கிறது. அருட்கழகத்தார் பலர் சைவ உணவே உண்கின்றனர். 'அருட்கோயில்' அழகாக அமைந்துள்ளது. அங்கே வார வழிபாடு நடக்கிறது. கோயில் கருவறையில் சிவலிங்கமே வைக்கப்பட்டுள்ளது. நடராசர், முருகன், கணபதி உருக்கள் வணங்கப்படுகின்றன. வள்ளலார் திருவுருவுக்கு விளக்கு வழிபாடு நடக்கிறது.

மறுதடவை கோவிலில் "இராமலிங்க சோதி" என்பதுபற்றி மூன்றுமணி நேரம் இசையுடன் பேசினேன். அருட்பாவை எல்லாரும் பாடச் செய்தேன். இன்னொரு முறை "அருட்சித்து" என்ற பொருள்பற்றிப் பேசி வள்ளற் பெருமானின் ஏமசித்தியை

விளக்கினேன். அருட்பா அகவல் பாராயணத்துடன் அருட் சோதி விளக்கம் ஒரு நாள் நடந்தது. இன்னொரு நாள் அருட் பாவும் திருவாசகமும் என்ற பொருள்பற்றிப் பேசினேன். இந்த அருட்பணி எனக்குப் பேருவகை யளித்தது. என்னை மீண்டும் அழைத்துள்ளனர். அடுத்த ஆண்டு செல்லவுள்ளேன். "நமச் சிவாயத்தை நான் மறவேனே" என்ற வள்ளல் பாட்டைக் கொண்டும் தேவாரத்தைக் கொண்டும் இறுதிநாள் பேசி னேன்.

### இங்கே அருட்சாலை

டர்பான் அருட்பா அன்பர் தமிழகத்தில் திருநெல்வேலிக்கு அருகே அழகான அருட்சாலை அமைத்துள்ளனர். அதை முத்தையா என்ற அருளன்பர் எப்படியோ நடத்துகிறார். இடர்கள் பல. அழகான, அமைதியான இடம். அங்கே பள்ளிக்கூடமும், மருத்துவநிலையமும் நடந்தன. அருட்கோவில் உள்ளது; வழிபாடு நடக்கிறது. கிணறும் நீர் இறைப்பியும் (Pump set) உள்ளன. நீர்வளத்தால் தென்னை, மா, பலா, கொய்யா, வாழை, நெல், மணிலாக் கொட்டை எல்லாம் விளைகின்றன. ஏழைத் தொழிலாளருக்கு வேலை கிடைக்கிறது. ஆண்டுவிழா விற்குச் சென்றிருந்தேன். பெரிய கொட்டகை போட்டு வள்ள லார் படத்தைப் பூவணிசெய்து, ஆயிரம் திரி விளக்கிலக்கினர். நான் வள்ளலார் வரலாற்றை இசையுடன் இரண்டுமணி நேரம் விளக்கினேன். புலவர் பலர் பேசினர்.

ஆனால் அருட்சாலைக்கு ஆக்கம் வேண்டும் ஊக்கம் வேண்டும். திருநெல்வேலி சைவத் திருநகர், சைவசித்தாந்த மும் இணைந்து, அருள் விளக்கம் செய்ய வேண்டும். அருட் சாலையில் ஆண்டுதோறும், விடுமுறை நாட்களில் ஆர்வமுள்ள தொண்டரைக் கூட்டி அருட்பயிற்சி தரவேண்டும். இத் தொண்டரைக் கொண்டு ஊர்ஊராக அருள் முழக்கம் செய்ய வேண்டும். சிறுசிறு கைத்தொழில்கள் நாட்டி ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டாக்க வேண்டும். உழைப்பவர் கேட்கும்படி அருட்பாடல்களை நாடாப் பதிவுசெய்து ஒலிப் பெருக்கி வைத்துப் பரப்ப வேண்டும். அருள் நூல்களை மலிவாக வெளியிட்டுப் பரப்ப வேண்டும். இந்தப் பணிகளைச் செய்தால் அருட்சாலை ஒளிபெற நடக்கும். டர்பான் அருட்பாக் கழகம் வாழ்க! என்று கூறித் தமிழ் மன்றங்களைக் காண்போம்.

(தொடரும்)

# கிழவர் இளங்கோ

[புலவர் இரா. இளங்குமரன்]

இளங்கோவடிகள் தமிழ்க் காப்பியங்களின் தந்தை ஆவர். முதற் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றினாலும் பின் வந்த காப்பிய நூல்களுக்கு இலக்கணமாக அமையுமாறு இயற்றினார். இளங்கோவடிகள் கொண்டிருந்த புலமையையும், பட்டறிவு முதிர்வையும், அவர்தம் சிலம்பு செவ்வனே தெரிவிப்பதாக உள்ளது. மேலும், தமிழர் எழுத மறந்த 'தன் வரலாறு' இளங்கோவடிகளாலேதான் முதற்கண் எழுதப்பெறுகின்றது. ஆதலின் இளங்கோவடிகளைத் 'தன் வரலாற்றின் தந்தை' என்றும் குறிப்பிடலாம். இவ் விளங்கோவடிகள் சிலம்பை எந்த அகவையில் இயற்றத் தொடங்கினார் என்பது குறித்து இக் கட்டுரையில் காண்போம்.

இளங்கோ என்றதும் நம் மனக்கண்ணில் இளமைதான் வந்து நிற்கின்றது. அவ் விளமைக் கோலந்தான் அடிகள் நூல் யாக்கப் புகுந்த கோலமா?

இமயத்தை எல்லையாகக் கொண்டு ஆட்சி செய்த பெருஞ் சேரலாதன் பெற்றெடுத்த மக்கள் இருவர்; அவருள் மூத்தவன் செங்குட்டுவன்; இளையவர் இளங்கோ. ஒருநாள் மக்கள் இருவரும் பக்கல் இருக்கச் சேரலாதன் அரியணையில் அமர்ந்திருந்தான். நிமித்தம் அறிந்து கூறவல்ல கணியன் ஒருவன் அவ்விடத்தை அடைந்தான். அவன் இளங்கோவைக் கூர்ந்து நோக்கி, "இவ் விளையவனே அரசவிலக்கணம் அனைத்தும் அமையப் பெற்றுள்ளான்; ஆதலால் இவனே ஆளுதற்கு உரியவன் ஆவான்" என்றான். இச் சொல்லைக் கேட்டதும் இளங்கோவின் முகம் மாற்றமுற்றது. கணியனை வெகுண்டு நோக்கி, "மூத்தவன் இருக்க இளையவனை ஆள்வான் என முறைகெடக் கூறினை! உன் கூற்று பொய்யாகுமாறு இப்பொழுதே துறவு கொள்கிறேன்" என்று துணிந்துரைத்துத் துறவு பூண்டார்.

இளங்கோ துறவுகொள்ளும் பொழுதில் செங்குட்டுவன் ஆட்சி ஏற்கத்தக்க ஆண்டினனாக இருந்தான். அவனுக்கு இளையவர் இளங்கோ. செங்குட்டுவனுக்கு உண்டாகிய மனத் துயரைக் குறிப்பால் அறிந்து முறைமை அறிந்து நொடிப் பொழுதில் முடிவெடுக்கும் திறமை இளங்கோவுக்கு இருந்தது. இவற்றை நோக்குங்கால் செங்குட்டுவனுக்கு அகவை பதினாறும்,

இளங்கோவுக்கு அகவை பன்னிரண்டுமாகவாவது இருந்திருக்கக்கூடும் என்னும் முடிவுக்கு வரலாம்.

இஃது ஒருபுறம் இருக்க, பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர் பரணர் ஆவர். அவர் பொய்யாநாவிற் பரணர் என்று சான்றோரால் கூறப்பெறும் புகழாளர். அவர் செங்குட்டுவனது வரலாற்றைப் பதிற்றுப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். சேரன் மேல்கடலிடைக் கொண்ட வெற்றியும், மோகூர் மன்னன் முரசங்கொண்ட வெற்றியும் அவரால் குறிக்கப்பெற்றுள்ளன. சேரன் வடநாடு சென்று கண்ணகிக்குக் கல் கொண்டுவந்த வரலாறு அவரால் குறிக்கப் பெறவில்லை. அன்றியும் பிற்கால வாழ்வில் செங்குட்டுவன் கொண்ட வெற்றிகளும் குறிக்கப் பெறவில்லை. பரணர் பாடிய பாடல்கள் பதிற்றுப்பத்தினை அன்றி வேறு சில தொகை நூல்களிலும் உள. அங்கெல்லாம் அரிய வரலாறுகளைச் சுட்டிச் செல்லும் அவர் செங்குட்டுவன் பிற்பகுதி வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்தபோது இருந்திருப்பாராயின் அவற்றைக் கூருது விட்டுச் சென்றிருக்க மாட்டார். ஆதலால் பரணர் செங்குட்டுவனது முற்பகுதி வரலாற்றையே தாம் பாடிய நூல்களில் குறித்தவர் ஆகின்றார்.

செங்குட்டுவன் வடநாடு சென்று கற்புத் தெய்வத்திற்குக் கல் கொணர்ந்த வரலாற்றைக் கூறுவது சிலப்பதிகார வஞ்சிக் காண்டம். அதனை இயற்றிய அடிகள் ஆய்ந்து தெளிந்து அளவோடு கூறுபவர். ஆதலால் தம் நூலுக்கு ஏற்ப வடவர் போரையும் அதன் வெற்றியையும் கல்லெடுப்பையும் விரியக் கூறினார். எஞ்சிய போர்களைச் சுருக்கிக் காட்டினார். இதனால் செங்குட்டுவன் வரலாற்றின் முற்பகுதி பரணராலும், பிற்பகுதி இளங்கோவடிகளாலும் குறிக்கப்பெற்றது எனலாம். இஃது இவ்வாறாக, பதிற்றுப்பத்தைத் தொகுத்தோரால் ஒவ்வொரு பத்திற்கும் பதிகம் என ஒன்று எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. அதனை எழுதியவர் வரலாற்றுத் தேர்ச்சியும் காலக் கணிப்பும் மிக்கவர். பதிற்றுப்பத்தில் குறிக்கப்பெறும் சேர அரசர்கள் அத்துணைப்பேர்களின் ஆட்சியும் முடிந்த பின்னர் இருந்த அவர் தக்க சான்றுகளைக் கொண்டு முறைபெறப் பதிகம் பாடியிருக்க வேண்டும். இவ்வாறு பாடப்பெற்ற பதிகங்களில் ஒன்று ஐந்தாம்பத்துப் பதிகமாகும். அப் பதிகம் செங்குட்டுவன் நடத்தியதாகப் பரணர் கூறும் போர்களையும் பிற போர்களையும் இளங்கோவடிகள் கூறும் வடநாட்டுப் போரையும் சேர்த்துத் தொகுத்துக் கூறுகின்றது. அதில்,

"கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவிற் கானம் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி"

என்னும் அடிகள் குறிப்பிடத்தக்கனவாம். மற்றும் நமக்குத் துணையாகும் அரிய குறிப்பு ஒன்றையும் அப் பதிகம் தருகின்றது. "கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தை யாண்டு வீற்றிருந்தான்" என்பதே அது.

செங்குட்டுவன் வாழ்ந்தது ஐம்பத்தையாண்டு அன்று. அவன் வீற்றிருந்தது - அரியணையில் வீற்றிருந்தது - ஐம்பத்தை யாண்டு. இந்த யாண்டினை வாழ்வு யாண்டெனக் கொள்ளக் கூடாதோவெனின், பதிற்றுப்பத்தின் வேறு சில பதிகங்களில், "பதினாண்டு வீற்றிருந்தான்" "பதினேழியாண்டு வீற்றிருந் தான்" என்று வருவனவற்றால் ஒவ்வாமையறிக. அன்றியும் கல்லெழுத்துக்களிலே காணப்பெறும் காவலர் ஆண்டுகள் ஆட்சியாண்டாக இருக்கும் உண்மையும் தெளிக. வாழ்ந்ததை வீற்றிருத்தல் என்னும் வழக்கின்மையும் காண்க.

இங்குக் கூறியவற்றால் செங்குட்டுவன் ஐம்பத்தை யாண்டுகள் ஆட்சிசெய்ததாகக் கொள்ள வேண்டுவது உண்மை யாவதாலும், அவன் பதினாறும் யாண்டிலே ஆட்சிப் பொறுப் பேற்று இருக்கக்கூடும் எனக் கருதுவதாலும் எப்படியும் செங்குட்டுவன் எழுபது யாண்டுகட்குக் குறைவுபடாமல் வாழ்ந் திருந்தான் என்பது தெளிவாம். மேலும் அவன் பிற்பகுதி வாழ்விலே நிகழ்ந்ததுதான் வடநாட்டுக் கற்கோள் செலவு என்பதை ஒருவழியால் ஆராய்வோம்.

சேரனது முற்பகுதி நிகழ்ச்சியாயின் மிக உயர்ந்ததான இச் செயலைப் பரணர் கூறாது விட்டுச் சென்றிருக்கமாட்டார் என்பது உறுதி. இது நிற்க; வடநாடு சென்று கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்ட வஞ்சிமாநகர் வந்து சேர்ந்த செங்குட்டுவன் ஆடல்பாடல்களில் மகிழ்ந்து அரியணையில் அமர்ந்திருந்தான். அதுபோழ்து நீலன் என்னும் ஒற்றர் தலைவன் வந்தான். நீலனோ, தமிழர் தம் ஆற்றலை இகழ்ந்த கனக விசயரைச் சேரன் ஆணைப்படி பாண்டிய, சோழ வேந்தர்க் குக் காட்டிவரச் சென்றவன்; அவன், பார்த்திபர் இருவரும், "தோற்றோடியவரைச் சிறைசெய்து வந்த வெற்றிபோலொரு வெற்றி கண்டிலேம்" என்று கூறிய இழிமொழியைக் கொண்டு வந்து சேரனிடம் சேர்த்தான். அதனால் செங்குட்டுவன் சீற்ற

முற்றுச் சோழ பாண்டியர்களுடன் போரிட எழுந்தான். அது போழ்து அருகில் இருந்த மாடலன் என்னும் மறையோன்,

> "வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
> ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

என்றான்.

இவன் கூற்றால் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்ட பொழுது ஆண்டு - வையங்காவல் பூண்ட ஆண்டு - ஐயைந் திரட்டி (ஐம்பது) ஆகிவிட்டது. முன்னரே பதினாறு இளமையில் செங்குட்டுவன் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கக்கூடும் எனக் கருதிக்கொண்டுவிட்டபடியால் இப்பொழுது 66 யாண்டுகள் ஆகவேண்டும்.

செங்குட்டுவன் வடநாடு சென்று இமயத்தில் கல் எடுத்துக் கங்கைக் கரை வர, "எண்ணான்கு மதியம்" ஆகின்றது. அதன் பின்னர்ச் சில திங்கள் செலவிட்டே வஞ்சி வந்தடைந்திருக்கக் கூடும் ஆகலின் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவுக்கு மூன்று யாண்டுகளேனும் செலவிட்டிருக்கலாம். ஆதலால் தனது 63 ஆம் ஆண்டில் குன்றக் குறவர்களாலும், புலவர் சாத்தனாராலும் தன் தம்பி இளங்கோவுடன் இருந்து கண்ணகி வரலாற்றை அறிந்துகொண்டான் செங்குட்டுவன். அப்பொழுது இளங்கோ வடிகள் அகவை 59 ஆக இருத்தல் வேண்டுமன்றோ!

இமயக் கல்கொண்டு வந்த பின்னர்க் கண்ணகியார் கோயில் கட்டவும், திருச்சுற்று எடுக்கவும், நடுகல் விழா நடத்தவும், அண்டைநாட்டு வேந்தர்களுக்கும், அயல்நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பிவரச் செய்தற்கும் ஆண்டுகள் சில கடந்தன. பதிற்றுப் பத்துப் பதிக ஆசிரியர் கூறியவாறு செங்குட்டுவனது 55 யாண்டு ஆட்சியில் எஞ்சியிருக்கும் ஐந்தாண்டுகளையும் இப் பணியிலே செலவிட்டான் என்று உறுதி செய்யலாம்.

தனது ஆட்சியின் ஐம்பத்தைந்தாம் ஆண்டின் எல்லையிலே கண்ணகியார் கோயிலுள் அமைந்திருந்த வேள்விச் சாலைக்குச் செங்குட்டுவன் சென்றான். அவ்வமயம் அவனுடன் அவன் தம்பி இளங்கோவடிகளும் உடன்சென்றார். அதனால் 71 யாண்டுச் செங்குட்டுவனுடன், அவனுக்கு நான்கு ஆண்டுகள் இளையவரான 67 யாண்டு அடிகளும் சென்றார் என்று ஆகின்றது.

தமது ஐம்பத்தொன்பதாம் ஆண்டிலே குன்றக்குறவர் கூறிய கண்ணகியார் வரலாற்றையும், அதனை விளக்கிக் கூறித் தூண்டியும், வேண்டியும் நின்ற சாத்தனார் கூற்றையும் உளத்தே தேக்கி ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் எண்ணி எண்ணித் திளைத்த அடிகள் அதன் பின்னரே தம் புலமைச் செறிவும் கலை நலமும் திகழ முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பை இயற்றினார் ஆதல்வேண்டும்.

கண்ணகியாரின் வரலாற்றைக் கேட்டவுடனே அடிகள் நூல் தொடங்கிப் பாடியிருக்கக் கூடாதோ எனின், சாத்தனார் வரலாற்றை அடிகளிடம் கூறும் இடமே, வரலாற்றின் வேறொரு திருப்பத்திற்கு உரிய இடமாக அமைந்து. அது வஞ்சிக் காண்டமாக வளர்ந்து விடுகின்றது அல்லவா! பிறகு உடனே எப்படிப் பாடத் தொடங்க முடியும்? மேலும், இலக்கியம் நாட் குறிப்பா? அவ்வாறு இருக்குமாயின் கண்டவுடனே கேட்ட வுடனே குறித்துவிட முடியும்; குறிக்கவும் வேண்டும். சீரிய காவியம் பாடத் தொடங்குவோர் அதன் முடிநிலை தெளிந் தன்றித் தொடங்குதல் இயல்பு இல்லை. அன்றியும் சிலம்பினைச் சிறிது நோக்கிப் பார்ப்பினும் வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் பல புகார், மதுரைக் காண்டங்களிலே சுட்டப்பெறுவதை உணரக் கூடும். ஆகலான் வரலாறு அனைத்தும் நிகழ்ந்த பின்னரே தான் அடிகள் சிலம்பு பாடத் தொடங்கினார் என்பது தெளிவாம்.

ஆகையால் பன்னாட்டு வேந்தரும் பாராட்டுமாறு செங் குட்டுவன் சிலைக் கோயில் எடுத்து வழிபாடு செய்த பின்னரே அடிகள் கலைக் கோவிற் பணி தொடங்கினார். அப் பணி தொடங்கும் காலையில் அடிகட்கு வயது ஏறக்குறைய 67 ஆக இருத்தல் வேண்டும். காவியம் எழுதவும், அரங்கேற்றம் செய்யவும் மேலும் சில பல ஆண்டுகளைச் செலவிட்டு நிறைநாட் செல்வராய்ப் பெருவாழ்வுற்றிருக்க வேண்டும் என்பது உறுதி யாகும்.

---

## செங்குட்டுவன்

*"பதிற்றுப்பத்தின் ௫-ஆம் பதிகத்திலே, "கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத் தையாண்டு வீற்றிருந்தான்" எனக் கூறப் படுதலானும் இக்காதையுள்ளே பின்னர், "நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை" என வருதலானும் செங்குட்டுவன் ஏறக்குறைய எழுபத்தைந்து யாண்டு உயிர் வாழ்ந்திருந்தனன் எனவும், ஐம்பத் தைந்து யாண்டு அரசு புரிந்தனன் எனவும் கருதல் பொருந்தும்"*

**நாவலர் பண்டித ந. மு. வே. நாட்டார் அவர்கள்.**

# தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச் சொற்காவலர் கீ. இராமலிங்கனார், எம்.ஏ.]

(முன்பரல் ௨௯௩ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 6. புதுச்சொல் செய்முறை

ஆட்சித்துறைக்குத் தேவையான சொற்கள், நாட்டிலும், ஏட்டிலும் கல்லிலும், பலவாகக் கிடைக்குமாயினும், அவற்றை ஒருபுறம் திரட்டிக்கொண்டே, புதுச் சொற்களையும் ஆக்கி வர வேண்டும். பண்டைக் காலங்களில் போல அல்லாமல், அரசாட்சி, இந் நாளில், பரந்தும் விரிந்தும் வளர்ந்து விட்டிருப்பதால், பேச்சிலும் நூலிலும் கல்வெட்டுக்களிலும் காணாத பல வகைப் புதுச் சொற்களைச் செய்தமைக்க வேண்டிய கடமை இன்றியமையாததாகின்றது.

புதுச்சொற்களை ஆக்குவதற்குச் சில விதிகளைப் பின்பற்ற வேண்டும். மனம் போனபடி சொற்களைச் செய்துவிட்டால், மொழியின் நலம் குன்றும்; ஆட்சிச் செய்திகளைத் திட்டவட்டமாக வரைய இயலாது போகும்; ஆட்சிப் பணி தவக்கமுறும். கைக்கொள்ள வேண்டிய சொல்லாக்க விதிகள் ஐந்து. அவை பின்வருவன : (i) செய்யப்பெறும் சொல், தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும், (ii) பொருள் பொருத்தமுடையதாக அமைய வேண்டும், (iii) வடிவில் சிறியதாக இருக்க வேண்டும், (iv) ஓசை நயமுள்ளதாகச் செய்ய வேண்டும், (v) தமிழ் இலக்கண மரபுக்கு மாறுனதாக இருத்தல் ஆகாது.

### i. தமிழ்ச்சொல்

தமிழில் ஆட்சி நடத்துவதற்கு ஆக்கப்பெறும் சொல், தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும் என்று கூறுவது மிகை போலத் தோன்றும். ஆனல், சிலருடைய போக்கைக் காணும் போது, இவ்வாறு முறை வகுப்பது எவ்வளவு தேவையானது என்பது புரியும். ஒரு பிறமொழிச் சொல்லைத் தமிழாக்கிக் கொள்ள வேண்டுமானல், அச் சொல்லின் ஓசையை அப்படியே தமிழ் எழுத்துக்களில் எழுதிவிட்டால், அது தமிழ்ச் சொல்லாகி விடும் என்று அவர்கள் கருதுகின்றனர். 'Magistrate'க்குத் தமிழ்ச்சொல் 'மாஜிஸ்திரேட்' என்று அவர்கள் கூசாமல் கூறுவர். இங்ஙனம் சொல் செய்வதால், தமிழில் குருட்டுச் சொற்கள் பெருகிவிடுமே என்றோ, பிறமொழி எழுத்துக்களைக் கடன் வாங்க வேண்டியிருக்குமே என்றோ, அவர்கள் கவலைப் படுவதில்லை.

அவர்களது கருத்துக்கு ஆதாரமாக அவர்கள் சொல்வது, 'நமக்கு அச் சொல் புரிய வேண்டியதுதானே' என்பதேயாகும். அவர்கள் சொல்வது, இன்றைக்கு ஓரளவு உண்மையாக

இருக்கலாம். ஆங்கிலம் தெரியாத ஒரு தமிழர்கூட, 'மாஜிஸ்திரேட்' என்னும் சொல் எந்த அலுவலரைக் குறிக்கின்றது என்று தெரிந்து கொள்ளக்கூடும். எனினும், ஒரு குருட்டுச் சொல்லாக அது அவருக்கு இருக்குமே தவிர, பொருளுடையதாக என்றும் ஆகாது. இச் சொல்லை ஆங்கிலம் தெரிந்தவர்கள் சொல்ல, அவர் காதால் கேட்டுக்கேட்டு மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டிருப்பார். இதை அவர் கற்றுக்கொள்வதற்கும் உச்சரிப்பதற்கும் பலநாளாகியிருக்கும்.

என்றாலும், ஒரு பிறமொழிச் சொல்லை, இவ்வாறு அவர் நினைவில் வைத்துக்கொள்வதற்குத் தேவையான அவ்வளவு நாள்களா பிடிக்கும், ஒரு புதுத் தமிழ்ச் சொல்லை அவர் மனத்தில் நிறுத்திக்கொள்ள? 'Secretary' என்னும் ஓர் ஆங்கிலச் சொல்லைச் சில காலம் முயன்று அவர் கற்றுக் கொண்டுவிட்டார் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு நேரான தமிழ்ச் சொல்லான 'செயலாளர்' என்னும் சொல்லை அவர் பொருள் பண்ணிக் கொள்வது போல, 'Secretary' என்னும் சொல்லை, ஆங்கிலம் படிக்காமல், என்றாவது அவர் புரிந்துகொள்ள முடியுமா?

ஒரு புதுத் தமிழ்ச் சொல்லை அரியணையில் அமர்த்தி விட்டால், அதைத் தமிழ் மட்டும் தெரிந்தவர்கள்கூட எளிதில் பழக்கப்படுத்திக் கொள்ளக்கூடும். ஆங்கிலம் தெரிந்தவர்கள், அதற்கு ஈடான ஆங்கிலச் சொல்லை அவர்கள் பெரிதாக எண்ணிக் கொண்டிருப்பதாலும், அது அவர்களுக்கு எளிதானதாகத் தோன்றுவதாலும், தமிழ்ச் சொல்லை வரவேற்பதில் அவர்கள் முதலில் தயங்குவது இயல்பே. துவக்கத்தில் அப் பிறமொழிச் சொல்லுடன் தமிழ்ச் சொல்லையும் பயன்படுத்திக் கொண்டு வருவாரானால், நாளாவட்டத்தில், தமிழ்ச் சொல் தனித்து நின்று பெருவழக்கினதாக நிலைத்துவிடும்.

இன்று இருப்பவர்களுக்கு ஆங்கிலச் சொல் எளிதில் புரியலாம். புதிதாக ஆக்கப்பெறும் தமிழ்ச் சொல் ஒருவேளை புரியாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் பிறக்கப் போகின்ற தமிழர்களுக்குக்கூட, ஆங்கிலச் சொல் புரிந்ததாகவும், தமிழ்ச் சொல் புதிதாகவும் புரியாததாகவும் இருக்குமா? நாம் செய்யும் சொற்கள் இன்றைக்கு மட்டும் பயன்பட்டு மறைந்துவிட வேண்டியனவா? இனிவரும் பல நூற்றாண்டுகளிலும் ஏன் - பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளிலும், தமிழகத்தில் பயன்பட வேண்டிய சொற்கள் அல்லவா அவை? நம் கால்வழியினர் நம்மைப் பழிக்காமல் இருப்பதற்காகவாவது, நல்ல தமிழ்ச் சொற்களை நாம் ஆக்கி அமைத்துவிட்டுப் போக வேண்டாவா?

மொழியின் வேலையே, ஒருவர் கருத்தை இன்னொருவர் தெரிந்து கொள்வதற்குப் பயன்படுவதுதானே? இங்ஙனமிருக்கத் தமிழ்ச் சொற்களையே தேடிப் போட்டுப் பேசவேண்டும், எழுதவேண்டும் என்பது எதற்கு என்பர் சிலர். தமிழ் மொழி மட்டும் அன்று, வேறு எந்த மொழியானாலும், இன்றைக்கு மக்களால் புரிந்து கொள்வதோடு நின்றுவிடாமல், நெடுங்காலத்துக்குப், பின்பும், அக் காலத்து மக்கள் இந்நாளைய மக்களின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அம் மொழி எக் காலத்திலும் தன் இயல்பு மாறாமல் வழங்கப்பெற்று வர வேண்டும்.

இப்படிச் சொல்வதால், அம் மொழி, காலத்துக்கு ஏற்றபடி புதுச் சொற்களை ஏற்று வளர்ச்சி பெறாமல், என்றும் ஒரேபடித்தாக இருந்துவிட வேண்டும் என்று கூறுவதாக நினைக்கக் கூடாது. வளர்ச்சி இன்றியமையாததுதான். புதுக் கருத்துகள் தோன்றத் தோன்றப் புதுச் சொற்களும் தோன்ற வேண்டியவையே. ஆனால், அச் சொற்கள் அம் மொழியில் வேர் அமைத்துக் கொண்டு முளைக்க வேண்டும். வேரற்ற குருட்டுச் சொற்களாக, பிறமொழிச் சொற்களாகச், சேர்த்து வைத்துவிட்டால், அம் மொழி உண்மை வளர்ச்சி பெற்றதாகாது. விரைவில் சிதைந்து, பல மொழிகளாகப் பிரிந்துபோக நேரும்.

தமிழில் பிறமொழிச் சொற்கள் பல நூற்றாண்டுகளாக, வரம்பின்றி புகுத்தப் பெற்றதன் விளைவே, அம் மொழி, தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் என்றெல்லாம் பிரிந்துபோக நேர்ந்ததாகும். பிறமொழிக் கலப்பு இல்லாமல் தமிழ் வளர்ந்திருந்தால் பிரிந்த இம் மொழிகளும் இன்றிலும் பெரியதும் புகழார்ந்ததுமான தமிழ்மொழியாக விளங்கி, தமிழினம் ஒரு மாபெரும் இனமாக நம் நாட்டில் தலைசிறந்து மிளிரும் அன்றோ? தமிழை உள்ளிட்ட இம் மொழிகளில் இன்னமும் அடிப்படைச் சொற்கள் ஒரே வேர் உடையனவாக இருக்கின்றன. நாம் முதலில் ஒரே மொழியினர் என்பதற்கு அவை சான்று பகர்ந்து கொண்டிருப்பினும், பிறமொழிக் கலப்பினால் பிரிவு தோன்றியதனால் மனமும் பிரிந்தவர்களாய், நாம் வேறு வேறு இனத்தவர் என்று எண்ணிக்கொண்டு, ஒருநேரம் போராடவும் செய்தோம் அல்லவா?

அயல்மொழிச் சொற்களை அளவின்றி ஏற்றுக் கொண்டமையினாலே ஆங்கிலம் வளர்ந்துவிட்டது என்னும் ஒரு வாதம் செய்யப்படுகிறது. இது தப்புவாதம். அதைப்போல் தமிழும் வேற்றுச் சொற்களால் வளர்ந்தது என்று சொல்லலாம். அது என்ன வளர்ச்சி? தமிழ்மொழி பேசிய வேறு வேறு பகுதி

களான, வடுகம், கன்னடம், துளுவம், மலையாளம், இவை அயற்சொற்களின் அளவு மீறிய திணிப்பால் உருத்தெரியாமல் மாறி வடுகு (தெலுங்கு), கன்னடம், துளுவம், மலையாளம் என, வேறு வேறு மொழிகள் ஆகிவிட்டன. இது சிதைவா? வளர்ச்சியா? நான்கு குவளைகளில் உள்ள நல்ல பாலில், ஒன்றில் காப்பிச்சாறும், இன்னொன்றில் தேநீர்ச்சாறும், வேறொன்றில் ஓவல்டினும், மற்றொன்றில் கொக்கோவும் துளித்துளியாகப் போட்டுக்கொண்டே வருவோமானால், ஒரு நிலைக்குப் பிறகு. அவை ஒவ்வொன்றும் பால் என்னும் பண்பு மாறி, காப்பியாகவும், தேநீராகவும், ஓவல்டினாகவும், கொக்கோவாகவும் ஆகிவிடுவது திண்ணந்தானே? பிறகு அவற்றிற்குப் பாலின் இலக்கணம் பொருந்துமா? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இலக்கணம் வகுக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டு விடுவது இயல்புதானே?

இங்ஙனமே, சாக்சன் மொழி, பிறமொழி ஏற்பால் முதலில் பெரிதானது உண்மையே. ஆனால் அப்படி ஏற்றதனால் சாக்சன் என்னும் பண்பு மாறி ஆங்கிலோ சாக்சன் என்னும் வேறு ஒரு மொழியாயிற்று. அங்ஙனம் ஏற்றுத்தான் அம்மொழி பெரியது ஆக வேண்டியிருந்தது ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலத்தில் 'பியோஉல்ப்' என்னும் ஓர் இலக்கியம் உண்டாவதற்கு வகை செய்தது இக் கலப்பே. அந்த ஆங்கிலம் 'பழைய ஆங்கிலம்' என்று சொல்லப்பெற்றது. கடன் வாங்காமல் இருந்தால் இலக்கியம் செய்யும் அளவுக்கு அம்மொழியில் சொற்கள் இல்லாமல் இருந்த காலம் அது. ஏற்றுக் கொண்ட சொற்கள் போதாமையின் மேலும் மேலும் ஏற்றுக் கொண்டே செல்ல வேண்டியிருந்தது. மூலமொழியின் வேர்களைக் கொண்டே புதுச் சொற்களை ஆக்கிக் கொண்டு வளர்ச்சியுறுவதற்கு அம் மூலமொழி வளமற்ற நிலையில் இருந்தது. அம் மூல மொழியைப் பேசியவர்களும் இவ் வகைக்கு அப்போது ஊக்கமற்று இருந்தனர்.

1000 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலத்தில் சில இலக்கியங்கள் செய்யப் பெற்றன. அவை 'இடைக்கால ஆங்கிலம்' எனச் சொல்லப்பெறும். 500 ஆண்டுகளுக்குப் பின் பிற்கால ஆங்கிலம் உருவாயிற்று. அதில் சிறந்த சாசர். எனவே அதனைச் 'சாசர் ஆங்கிலம்' என்பர். இப்போது நாம் படிப்பது வேறு ஆங்கிலம். இன்றைய ஆங்கிலத்தில் வல்லவராக இருக்கும் ஒருவர் சாசர், ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அதைப் படித்த ஒருவர் நடுக்கால ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள இயலாது. நடுக்கால ஆங்கிலம் தெரிந்தவர்

பழைய ஆங்கிலத்தை அறிந்து கொள்ளமாட்டார். இவ்வாறாக, ஆங்கிலம் பிறமொழிக் கலப்பால் வளர்ந்தது என்று சொல்கிறோமே யல்லாமல் அஃது உருமாறி நான்கு மொழிகளாக ஆகி விட்டது. ஆனால் அவற்றை வேறு வேறு மொழிகள் என்று சொல்லாமல் 'ஆங்கிலம்' என்னும் பெயராலேயே குறிக்கிறோம்.

இப்படியே தமிழும் பிறமொழி ஏற்பால், நான்கு புது மொழிகளைப் பெற்றெடுத்து வளர்ந்துவிட்டது என்று பெருமை கொள்ளலாம். இதுவா வளர்ச்சி?

ஆங்கிலம் பிறமொழிக் கலப்பால் பெரிய மொழியாகி, உலகம் முழுதும் வழங்கும் உயர்நிலை பெற்றது என்பர். ஆங்கிலம் சிறந்தது எதனால் என்று கூர்ந்து அறியாதவர்களின் கூற்று இது. ஆங்கிலேயன் வல்லாளன். எனவே அம் மொழி உலக மொழியாயிற்று. தமிழன் அங்ஙனம் இருந்தால், தமிழுக்கு இயல்பாகவே இருக்கும் பெருஞ் சிறப்புக்கு, இம் மொழி எத்தனையோ பெருமை பெற்றுவிட்டிருக்குமே! உலகத்திலேயே மிகப் பழமையானதும் எந்தக்கருத்தையும் தெரிவிக்கும் புதுச் சொற்களை ஆக்கிக் கொள்வதற்கு ஏற்ற மூல வளங்கள் பொருந்தியதுமான மொழியைத் தனக்கு உரியதாக வைத்துக் கொண்டு, தமிழன், பிறமொழிகளிலிருந்து சொற்கள் கடன் வாங்குவதும், அதனால் தமிழை வளர்ப்பதாகச் சொல்வதும், கேலிக் கூத்தாக இருக்கின்றது.

### ii. பொருத்தமான சொல்

தமிழில் அமைக்கும் சொற்கள், பொருளுக்குப் பெரிதும் பொருத்தமுள்ளவையாக இருக்க வேண்டும். நுண்ணிய வேறுபாடுகளை நுனித்துக் காட்டும் பாங்குடையனவாக அமைய வேண்டும்.

Programme, Agenda, என்னும் இரு சொற்களுக்கும் 'நிகழ்ச்சி நிரல்' என்னும் ஒரே தமிழ்த் தொடர் பொருந்தாது. முதலது 'நிகழ்ச்சி நிரல்', பின்னது 'பொருள் நிரல்'.

'Proof' என்னும் சொல்லுக்கு அச்சுத்துறையில் 'நேர்ப்பச்சு' என்பது பொருத்தமான சொல்லாகும். ஒப்புநோக்குவதற்கோத்த அச்சு என்று எளிதில் பொருள் விளங்கவில்லையா? மேலும், திருத்தமான, முடிவான, அச்சாக அது இல்லாமல், ஒப்புக்கு செய்த அச்சுதானே?

இங்ஙனமே (Certificate, Diploma, Degree, Title) என்னும் சொற்களுக்குப் பொருத்தமாக வேறு வேறு சொற்களை ஆக்க வேண்டும். இச் சொற்களைப் பின்வரும் பட்டியில் காண்க. Fancy, Fashionable, Luxury என்னும் சொற்களுக்கு

உள்ள வேறுபாட்டையும் பட்டியில் பார்க்க. இன்னும் பல சொற்களுக்குள்ள நுண்ணிய பொருள் வேறுபாடும் ஆங்கே காணலாம்.

### iii. வடிவில் சிறிய சொல்

ஆக்கும் சொல் சிறியதாக இருக்க வேண்டும். 'நிகழ்ச்சி நிரல்' என்பதை 'நிகழ் நிரல்' என்றால் போதும். 'Call book' என்பதற்கு 'மறு கவனிப்புப் பதிவேடு' என்று நீளச் சொல்லாமல் 'மறுசெயல் பதிவேடு' என்றால் சாலும். 'Call Bell', 'Calling Bell'க்கு 'அழைப்பு மணி'க்கு மாற்றாக 'கூமணி' எனலாம். 'True copy' 'நேர்படி'; 'உண்மை நகல்' என்பது நீளமாக இருப்பதுடன் முன்பகுதி பொருத்தமில்லாமலும் பின்பகுதி அயல் மொழியாகவும் இருக்கிறது. உண்மை என்பது 'True'ன் நேரான மொழிபெயர்ப்பு. 'பொய் நகல்' என்று ஒன்று உண்டு என்ற எண்ணத்தை உண்டாக்குகிறது.

சிறுவடிவம் சொல்வதற்கு எளிதாய் எழுதுவதற்குக் குறுகிய இடமும் காலமும் கொள்வதாய், தவக்கத்தைத் தவிர்ப்பதற்குத் துணையாய் அமையும். எழுத்துக்கு எழுத்து மட்டும் அல்லாமல் தட்டச்சில் தட்டும்போது, தட்டுக்குத் தட்டுக்குக் குறைவாகப் புதுச்சொல் இருக்க வேண்டும். 'Certificate' 'சான்றேடு'; ஆங்கிலத்தில் 11 எழுத்துக்கள் உள்ளன. தட்டச்சில் 11 தட்டுக்களே (Strokes) தேவைப்படும். தமிழில் 4 எழுத்துக்கள் இருக்கின்றன; தட்டுவதற்கு 7 தட்டுகள் தேவையாகும். 'சா'—2 தட்டு, 'ன்'—2 தட்டு 'றே'—2 தட்டு, 'டு'—2 தட்டு. கையால் எழுதப்பெறும் வரைவுகள் பெரும்பாலும் தட்டச்சு செய்து அனுப்பவேண்டி யிருப்பதால், தட்டுவதில் தவக்கம் ஏற்படாமல் இருக்க, எழுத்துக்கள் மட்டும் அல்லாமல் தட்டுகளும் குறைவாக இருக்க வேண்டியது மிகமிகத் தேவையாகும். சில சொற்களை நீளமாக அமைக்க நேருவதுண்டு. இது விதிவிலக்கே.

### iv. ஓசை நயமுள்ள சொல்

'Doctor' என்னும் சொல் 'கற்பிப்பவர்', 'ஆசிரியர்' என்று பொருள்படும் ஓர் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. அறியாமையைப் போக்கும் தொழிலே ஆசிரியத் தொழில். அறிவு பெற்றவரே அறியாமையைப் போக்க முடியும். எனவே அவரை 'அறிஞர்' எனலாம். நாளடைவில் உயர்ந்த அளவு அறிவு பெற்றவரையே 'Doctor' என்னும் சொல் குறிப்பதாயிற்று. அத்தகையவரை ஆதலின் 'மூதறிஞர்' எனலாம். இதற்குப் 'பண்டாரகர்' என்னும் வேறு ஒரு சொல்லும் வழங்கப் பெறு

கிறது. இதுவும் பொருத்தமான சொல்லே. எனினும், இரண்டிலும் ஓசை நயமுடையது 'மூதறிஞர்' என்பதே, என்று விளக்க வேண்டியதில்லை. செவி எடுத்துரைக்கும்.

பொருத்தம், சிறு வடிவு, இவற்றுடன் ஒலிப்பதற்கு நயமுடையதாகவும் புதுச்சொல் அமையுமாறு பார்த்துக் கொள்வது தமிழ் மொழியின் இனிமையான ஓசை இயல்புக்கு இசைந்ததாக இருக்கும்.

V. தமிழ் மரபு

'Bank' என்னும் சொல்லை 'பாங்க்' என்று எழுதுவது தமிழ் இலக்கணத்திற்குப் பொருந்தி வராது. 'பாங்கு' என எழுத வேண்டும். 'வங்கி' என்னும் சொல். 'Bank'ன் ஓசையைத் திரித்து வழங்கும் ஒரு சொல். தமிழ் மரபு கெடவில்லை. ஆனால் பொருளற்ற சொல். தமிழில் 'வங்கி' என்பது 'கோணலான' என்னும் பொருளில் இருக்கிறது. பெண்கள் முழங்கையில் அணிந்து கொள்ளும் கோணலான அணி வகைக்கு 'வங்கி' என்று பெயர். 'வணங்கி' என்னும் சொல்லின் 'ண'வை நீக்கி விட்டால் நிற்பது 'வங்கி'. இவ் வடிவில் தெலுங்கில் இச் சொல் வழங்குகிறது. இதற்கு அங்குப் பொருள், குனிந்து' 'வணங்கி' என்றே இருக்கிறது. வாசற்படி போதிய உயரமற்றதாக இருப்பின், வருபவர் தலையில் இடித்துக் கொள்வாரோ என்னும் அச்சத்தால் 'குனிந்து வருக' என்போம். இதனைத் தெலுங்கில் 'வங்கி ராவல' என்பர். எனவே வடிவில் வங்கி தமிழ் மரபுக்கு ஒத்ததாக இருப்பினும் பொருளில் பொருத்தமில்லாததாக இருப்பது விளங்கும்:

'பாங்கு' என்னும் சொல், பணம் பாங்காக உள்ள இடத்தைக் குறிப்பதற்குப் பொருத்தமான சொல்லாக இருப்பதுடன், தமிழ் மரபுககு மாறுகவும் இல்லையென்பதால் அதனை நாம் வரவேற்க வேண்டும். தமிழ் வடிவிலே நின்று, தமிழில் பொருளும் செம்மையாகப் பொருந்தப் பெற்றிருக்கிறது.

மேலே விளக்கிய செய்முறைகளைப் பின்பற்றி ஆக்கிய சொற்கள் சிலவற்றைக் கீழே காணலாம். எனது 'ஆட்சித் துறைத் தமிழ்' நூலிலும், நானும் உடனிருந்து அமைத்த அரசினர் அகரவரிசைகளிலும் குறிக்கப் பெறுத புதுச் சொற்களே இவற்றில் பெரும்பாலானவை.

Block - உருவச்சு
Booking - பதிவு
Booking Office - பதிவகம், சீட்டுப் பெறுமிடம்
Seat Booking - அமரிடப் பதிவு
Sleeper birth booking - படுப்பிடப் பதிவு

Bus Booking Office - பேருந்துப் பதிவகம்
Lorry Booking Office - உந்து சுமைப் பதிவகம்
Cinema Booking Office - படக் காட்சிப் பதிவகம்
Case - வழக்கு, செய்தி, தாள், கோப்பு, பொருள் பற்றியது
Civil Case - உரிமை வழக்கு
Criminal Case - குற்ற வழக்கு
Certificate - சான்று, சான்றுரை, சான்றேடு
Certificate holder - சான்றேட்டர், சான்றேடுடையார்
Diploma - பட்டிகை (அரசினர் அளிக்கும் ஆணை, அரச பத்திரம்)
Diploma holder - பட்டிகையர், பட்டிகையுடையார்
Degree - (பாகைப்) பட்டம்
Title - (தலைப்புப்) பட்டம்
Title Holder - பட்டமுடையார்; உரிமையர்
Call Bell - கூமணி
Call book - மறுசெயல் பதிவேடு
Cancel - உலை, உலைத்திடு
Cancellation - உலைவு, உலைப்பு
Definition - வரம்புரை
Drawing Officer - எடுப்பலுவலர்
Money Officer - பணம் எடுப்பு அலுவலர்
Cheque Officer - காசோலை ஒப்ப அலுவலர்
Bill Officer - பட்டியல் ஒப்ப அலுவலர்
Drawer-(காசோலை, பட்டியல்) ஒப்பமிடுநர், பணம்எடுப்பவர்
Drawee - (காசோலை, பணம்) பெறுநர்
Payer - (பணம்) தருநர்
Payee - (பணம்) பெறுநர்
Pass order - கடவாணை
Pass - கடத்திவிடு, கடத்து
Pay order - செலுத்தாணை
Protective endorsement காப்பு மேல்குறிப்பு, காப்புக் குறிப்பு
Contribution - தருபங்குதவி
Subsidy - தருதொகை, உதவு தொகை
Subsidised Scheme - உதவி தரு திட்டம், தொகை உதவுத் திட்டம்
Directorate General of Supplies and Disposals-வழங்கு, கழிப்புத்துறைத் தலைமை இயக்ககம்
Fly over - பறந்தோடி
Fancy article - கவர்பொருள்
Fashionable article-புதுவகைப் பொருள்
Luxury article - மிகை வசதிப் பொருள்
Individuality - தன்னியல்
Personality - ஆளியல்
Official - அலுவலக; அலுவலர்; அலுவகர்
Non - official - அலுவலகம் சாரா, ஊழியம் சாரா, ஊழியரல்லா, ஊழியரல்லார், அரசூழியர் அல்லார்
Un-official - அலுவல் முறை சாரா
Prosperity Brigade-வளவாழ்வு அணி
Public Service Commision - அரசுப் பணி ஆயம்
Principle - கொள்கை
Policy - கோட்பாடு (கொள்கையில் படுதல்; கொள்கை

மாறுது, கோட்பாடு காலத்துக்கு ஏற்றபடி மாறும்)
Paper weight - தாள்பளு
Pin prick - நச்சரிப்பு
Protected place - காப்பிடம்
Prohibited place - தடுப்பிடம்
Proposal - எடுப்புரை, திட்டம்
Proposal contained in my letter to Govt. - அரசினர்க்கு என் மடலில் கண்ட எடுப்புரை
I proposed to Govt. - அரசினர்க்கு எடுத்துரைத்தேன்
Quarantine leave - தொற்றுத் தடு விடுப்பு
Royalty - உரியம்
Socialism - சமவாய்ப்பியம்
(Gandhism - காந்தியம் என்பதுபோல எல்லோருக்கும் சமவாய்ப்பு தருவதே Socialism த்தின் குறிக்கோள். சம உடைமை, சம உரிமை தருவது அன்று)
Seminar - ஆய்வரங்கு, பயிலரங்கு
Symposium - கருத்தரங்கு
Senior - முன்னவர், முன்னமை
Junior - பின்னவர்
Service condition - பணி முறைமை
Visiting Card - காண்சீட்டு
Expert - வல்லுநர்
Specialist – தனித்திறலர்
Technician - நுட்பர், தொழில் நுட்பர்
Adjusticate - தீர்ப்புச்செய், தீர்ப்பிடு
Adjudication - நடுவர் தீர்ப்பு
Judgement - தீர்ப்பு
Decree – தீர்ப்பாணை
Abstraction - பொதுவர் தீர்ப்பு, பொதுவர் முடிவு
Award - பொதுவர் ஆணை, அளிப்பு
Proof - ஒப்பச்சு
Office copy - அலுவலகப்படி
Fair copy - திருத்தப்படி
Rough copy - திருத்தாப்படி
True extract - நேர்பகுபடி
Stretcher - கிடப்பு
Toned Milk - பதப்பால்
Skimmed Milk - நெய் எடு பால்
Result - விளைவு
Repercussion - எதிர் விளைவு
Skilled Work - திறவேலை
Unskilled work - திறல் காவா வேலை
Semiskilled work - இறு திற வேலை
Vigilance Commission - விழிப்பாயம்
Service Postage - பணி அஞ்சல்
Service postage stamp - பணி அஞ்சல் வில்லை
Stock file - தொகு கோப்பு
Accommodation Controller - இடவசதி முறைமையர்
Rent Controller - வாடகை முறைமையர்
Director - இயக்குநர்
Operator - இயக்கி
Telephone Operator - தொலைபேசி இயக்கி, தொலைபேசித் தொடர்பர்
Whip - இயக்கர்
Party Whip - கட்சி இயக்கர்
Government Whip - அரசு(க் கட்சி) இயக்கர்

———

(தொடரும்)

# திரு. மு. அருணைசலத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றில் கழகத்தைப் பற்றிய வசைபுராணம்

**[திரு. சி. சிவராமலிங்கம், எம். ஏ.]**

*திருச்சிற்றம்பலம்*

திரு. மு. அருணைசலம் இப்பொழுது தொடர்ச்சியாக எழுதி வெளிவரும் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களைத் தொடர்ந்து பார்த்து வருகிறேன். அதில் பதினேராம் நூற்ருண்டுத் தொகுதியில் தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்புக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற இடத்தில் திரு. மு. அருணைசலம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பொருளதிகாரம் இளம் பூரணத்தை வெளியிட்டுள்ளதைப் பற்றிக் குறிப்பிடுகின்ருர். அதில் கழகம் தம் பதிப்பில் வ. உ. சிதம்பரனர் பதிப்பைப் பற்றிக் குறிப்பிடவேயில்லை என்று குற்றஞ்சாட்டுகிருர். அதனை மாபெருங் குற்றமாகச் சுட்டிக் காட்டியதோடு நில்லாமல் கழகத்தின் பணியைப்பற்றிக் கீழ்த்தரமாக எழுதியுள்ளார். வியாபார நோக்கம், தமிழ்க் கொள்ளை, திருட்டு, பாதகச் செயல் போன்ற பல கொடுஞ்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். மேலும் திருவள்ளுவர் 'செய்ந்நன்றியறிதல்'பற்றி ஓர் அதிகாரமும் கூறியுள்ளார். அதையும் அச்சிட்டு இவர்கள் வினியோகம் செய்கிருர்களேயன்றி, அதன்படி நடக்கச் சிறிதும் எண்ணவில்லை. தமிழ்த் தொண்டருடைய அகராதியில் 'நன்றியறிதல்' என்ற தொடர் இல்லை போலும்.

> *"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
> *செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

என்று கழகத்தின்மீது 2 பக்க அளவில் ஒரு வசைபுராணம் பாடி முடித்துள்ளார். இவரைப் போன்ற அறிஞர்க்கு இது தேவையில்லாத ஒன்று. கழகத்தார் முன் பதிப்பாளரைச் சுட்டிக் காட்டாதது தவறு என்று ஒருவரியில் கூறிவிட்டுப் போயிருக்கலாம். இலக்கிய வரலாற்றை எழுதப் புகுந்தவர் திடுமென வசைபுராணம் பாடியிருக்க வேண்டியதில்லை.

இரண்டு பக்கங்களில் இவர் வசைபாடி யிருப்பினும் இவருடைய குற்றச்சாட்டு ஒன்றே ஒன்றுதான். அஃதாவது அதற்கு முன் வந்த பதிப்பைக் கழகத்தார் பதிப்புரையில் சுட்டிக் காட்டாததுதான்.

'19ஆம் நூற்ருண்டில் தமிழ் இலக்கியம்' என்ற நூலை எழுதிய வரலாற்றுப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் (பக் 248) திரு மயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களைப்பற்றி எழுதும்போது,

"மணிமேகலை என்னும் காவியத்தை முதன் முதல் அச்சிட்டவர் இவரே.......... (இவர் பதிப்பித்த நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மணிமேகலையைப் பதிப்பித்தார்கள். ஆனால், எக்காரணத்தாலோ ஐயரவர்கள், பிள்ளையவர்கள் மணி மேகலை பதிப்பித்ததைப் பற்றிக் கூறவேயில்லை)"

என்று குறிப்பிட்டுள்ளார். ஐயரவர்கள் முன் பதிப்பைக் குறிப்பிடாதது 'தமிழ்க் கொள்ளை', 'திருட்டு', 'பாதகச் செயல்', வியாபாரம் என்றெல்லாம் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதவில்லை. ஏனெனில் அவருக்கு வரலாறு எழுதத் தான் தெரியுமே தவிர வசைபாடத் தெரியாது.

அடுத்து, ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தைப் பதிக்குமுன் சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டத்தை 1872இல் சோடசாவ தானம் சுப்பராய செட்டியாரும், 1876இல் தி. ஈ. ஸ்ரீநிவாச ராகவாசாரியாரும் பதிப்பித்துள்ளார்கள். ஐயரவர்கள் சிலம்பு முழுவதையும் 1892இல் பதிப்பித்துள்ளார். அவர் முகவுரையில் பல ஊர்களில் ஓலைச்சுவடி தேடியதையும் இலண்டன், பாரிஸ் போன்ற வெளிநாடுகளிற்கூடச் சுவடி தேடச் செய்ததாகவும் எழுதியுள்ளார். ஆனால் ஓரிடத்திற்கூட 1872, 1876இல் தமிழ் நாட்டிலே சிலம்பு அச்சானதைப்பற்றியொன்றுங் குறிப் பிட வில்லை. இப் பதிப்புக்களை அவர் அறிந்திருக்கவே மாட்டா ரென்றும் கூறமுடியாது. ஏனெனில் சோடசாவதானம் சுப்ப ராய செட்டியார் ஐயரவர்களின் ஆருயிராசிரியரான மகாவித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் தலை மாணாக்கருள் ஒருவர். இதற்காக ஐயரவர்களை யாரும் 'தமிழ்க் கொள்ளை' யடித்து விட்டார் என்று கூறவில்லை.

கழகத்தார் தம் பொருளதிகாரப் பதிப்பில் "எமக்குக் கிடைத்த பதிப்புப் படிகளைக் கொண்டு செப்பனிட்டு வெளியிட் டுள்ளோம்" என்று கூறி மேலும் புதிய திருத்தங்கள் தெரி வித்தால் "அதற்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதற்கு முன் பொருளதிகாரப் பதிப்பு அச்சேறவேயில்லையென்று குறிப்பிடவில்லை. கழகத் திற்கு முன் பதிப்பித்தவர் வ. உ. சி. அவர்கள் மட்டுமே.

திரு மு. அருணாசலம் ஏன் கழகத்தின்மீது இவ்வளவு வசைபாடியுள்ளார்? ஒரு வேளை திரு மு. அருணாசலம் பதிப் பித்த 'முக்கூடற்பள்ளு' நூலைக் கழகம் பின்னால் பதித்தபோது அவருக்கு நன்றி தெரிவிக்காது விட்டிருக்குமோ என்று இரு பதிப்புக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

முக்கூடற்பள்ளுவின் மு. அருணாசலம் பதிப்பு 1940, 1949 இல் வெளிவந்துள்ளது. கழகப் பதிப்பு 1957இல் வெளிவந்துள்ளது. கழகம் தமது பதிப்புரையில்

திரு மு. அருணாசலம் பதிப்பினைப் பற்றி எழுதியிருப்பதைக் காண்க.

*"சீரும் ஏரும் சேர்ந்த இந்நூலைப் பேராசிரியர் உயர்திரு மு. அருணாசலம் பிள்ளையவர்கள் திருத்தஞ் செய்து குறிப்புரையுடன் சிலவாண்டுகட்கு முன் வெளியிட்டுள்ளார்கள். அதனால் நம் தமிழ் மக்கள் பள்ளு நூலைச் சுவைக்கும் பேறுற்றனர். இவர்களின் இத் தொண்டு போற்றற்குரிய தொன்றாம்".*

இனி கழகப் பதிப்பின் ஆசிரியர் உயர்திரு சேது ரகுநாதனார் தமது முன்னுரையில் பாராட்டியிருப்பதையுங் காண்க.

*"திரு மு. அ. 1940இல் முக்கூடற் பள்ளை வெளியிட்டார்கள். இவர்கள் பழைய பதிப்பு ஒன்று வெளிவந்திருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள வாய்ப்புப் பெறவில்லை. ஆதலால் தமது பதிப்பிற்கு முன் முக்கூடற் பள்ளு அச்சிடப் பெறவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள் இவர்களுடைய பதிப்பு வந்த பின்புதான் நாமெல்லாம் முக்கூடற் பள்ளைப் பற்றி அறியவும் படிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்த முறையில் இவர்களுக்கு நன்றியும் பாராட்டும் உரியன. என்றாலும் இப்பதிப்பிலும் பிழைகள் மிகப் பல. இவ்வளவு பிழைகள் இருப்பினும் பாராட்டுக்கு உரியவர்களே."*

இப்படிச் 'செய்ந்நன்றி கொல்லாத செந்நெறி' யையுமா திரு மு. அருணாசலம் மறந்திருப்பார். பின் ஏன் இந்த வசை புராணம் என்று அப் பதிப்பின் மேலும் சில பககங்களைப் புரட்டினேன். அப்பொழுதுதான் ஏன் திரு மு. அருணாசலம் கழகத்தின்மீது வசைபுராணம் பாடுகிறார் என்று தெரிய வந்தது.

கழகப் பதிப்பிற்கு உரையெழுதிச் செப்பனிட்டு உதவிய பேராசிரியர் ந. சேதுரகுநாதனார் அவர்கள் திரு மு. அருணாசலத்தின் 'முக்கூடற்பள்ளு' பதிப்பின் குறைபாடுகளை ஏழு பக்கங்களில் 'பிட்டுப்பிட்டு' வைத்துள்ளார். பேராசிரியர் சேதுரகுநாதனாரின் முதல் குற்றச்சாட்டே திரு மு. அருணாசலம் தமது பதிப்பில் "முக்கூடற்பள்ளு இதுவரை அச்சாகவில்லை" என்ற மாபெரும் பொய்யைக் கூறுகிறார் என்பதுதான். ஏனெனில் அந் நூல் திரு மு. அருணாசலம் பதிப்பதற்கு 33 ஆண்டுகளுக்குமுன் திரு மெத்தர் முகீதீன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. (மிகுந்தது 93 ஆண்டுகளுக்குமுன். ஏனெனில்

முதல் பதிப்பு அச்சிடப்பட்ட ஆண்டு 'ருத்ரோத்காரி' என்று தமிழ் ஆண்டின் பெயரே கொடுக்கப்பட்டுள்ளது.) கழகம் தாமே அந் நூல்களை முதலில் அச்சிட்டதாகக் கூறவில்லை. கழகம் செய்தது 'தமிழ்க் கொள்ளை' என்றால் இதுவும் 'தமிழ்க் கொள்ளை' ஆகாதோ?

திரு மு. அ விற்கு முந்திய பதிப்பு தெரிந்திருக்காது; அவர் கல்லூரியைவிட்டு அப்பொழுதுதான் வெளிவந்திருப்பாரென்று வைத்துக்கொள்வோம். அவருக்கு அப் பதிப்பைக் கொண்டு வருவதில் உதவியவர் பதிப்புத்துறை வித்தகர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள். நான்கு சுவடிகளைக் கொடுத்து உதவியுள்ளார்கள். அவருக்குமா முன் வெளிவந்துள்ள பதிப்பு தெரியாது போயிருக்கும்? உறுதியாக இருக்காது. பேராசிரியர் தம் பதிப்புக்களில் முந்திய பதிப்புக்களைப் பற்றிக் குறிப்பிடு வதைத் தமக்கேயுரிய இலக்கணமாகக் கொண்டவர். அதனால் உறுதியாக திரு மு. அ. தான் இத் 'தமிழ்க் கொள்ளையை'ச் செய்திருத்தல் வேண்டும்.

இது முதற் பிழை. மூலப் பிழை. இதற்காகப் பேராசிரியர் சேதுரகுநாதனார் அவர்கள் திரு. மு. அ. வைக் கண்டிக்கவில்லை. ஆனால் இவருக்கு ''நன்றியும் பாராட்டும் உரியன'' என்றுதான் குறிப்பிடுகிறார். அவர் அத்துடன் விடவில்லை. திரு. மு. அ. வின் பதிப்பிலுள்ள 'பாடப்பிழை, கருத்துப்பிழை, உரைப்பிழை, சந்தப்பிழை' எனப் பலவகையான பிழைகளை ஆறு பக்கங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றைத்தான் திரு மு. அ வால் மறக்கவே முடியவில்லை போலும். தமது காழ்ப்பைத் தமது இலக்கிய வரலாற்றில் கொட்டித் தீர்த்து விட்டார்.

இருப்பினும் வ. உ. சி. பதித்த பதிப்பைப் போன்று வெளியிட்டது தவறு என்று எண்ணுகிறாரோ என நினைத்தேன். 'வ. உ. சி.யைக் கழகம் மறந்தது குற்றம்' என்று காட்டுகிறாரோ என எண்ணினேன். கழகம் வ. உ. சியின் வரலாற்றை நூலாக வெளியிட்டுள்ளது. சென்னையில் வ. உ. சி. சிலை வைக்க முயன்றபோது அவர்தம் திருவுருவப் படத்தைச் சிலை செய்பவருக்குக் கழகம் கொடுத்துதவியதாகக் கழக ஆட்சியாளர் கூறினார்கள். அண்மையில்கூட வ. உ. சி. நூற்றாண்டையொட்டிக் கழகம் 'விழா மலர்' வெளியிட்டதை நாடே அறியும். கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா அவர்கள் 'பதிப்புத் துறையில் பட்டறிவு' என்ற கட்டுரையில் திரு வ. உ. சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்புத் தொண்டை மிகமிகப் பாராட்டி யெழுதியுள்ளார்கள்.

ஒரு வேளை வ. உ. சி. வறுமையில் வாடிக் கொண்டிருந்த போது அவர் பதிப்பித்த நூலைக் கழகம் பதிப்பித்து அவருக்குப் பொருள் நட்டத்தை உண்டு பண்ணியிருக்குமோவென்று இரு பதிப்புக்களும் வெளிவந்த ஆண்டுகளை நோக்கினேன். வ. உ. சி. பதிப்பு 1936 இல் வெளி வந்துள்ளது. கழகம் 1953 இல் பதிப்பித்துள்ளது. இடையில் 17 ஆண்டுகள். கழகப் பதிப்பு எப்படி வ. உ. சி வறுமையை வளர்த்திருக்கும் அதுவும் வ. உ. சி. முழுப் பதிப்பு வெளிவந்த அதே 1936 ஆம் ஆண்டில் இவ்வுலகை விட்டு மறைந்துள்ளனர்.

இருப்பினும் கழகத்திற்கும் வ. உ. சி.க்கும் கருத்து மாறுபாடு இருந்திருக்குமோ என்று தாமரைச் செல்வர் அவர்களிடம் நேரிலேயே கேட்டபோது 'வ. உ. சி. அவர்கள் தம் துணைவியாரின்வழித் தமக்கு நெருங்கிய அண்ணன் முறை போன்றவர்' என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட வேறொரு செய்தியும் இங்குக் குறிப்பிடத்தக்கது. தாமரைச் செல்வர் 1919ஆம் ஆண்டில் படித்துக் கொண்டு நெல்லையில் இருந்தபோது அவர் தமையனர் திருவரங்கனர் சென்னையில் 'திருநங்கர் கம்பெனி' என்ற பெயரில் புத்தகக்கடை தொடங்கி நடத்தி வந்தனர். அப்போது வீட்டுச் செலவிற்குப் பணம் வேண்டுமென்று தமையனருக்கு அவர் எழுதுவாராம். வ. உ. சி. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு திருவரங்கனர் பெரம்பூரிலிருந்த வ. உ. சி. வீட்டிற்குச் சென்று 500 ரூபாவுக்கு நூல்கள் பணம் கொடுத்து வாங்கி, அவற்றில் பாதி நூல்களைத் தம்பிக்கு அனுப்பி ''இவற்றை விற்று நீ வீட்டுச் செலவுக்கு வைத்துக்கொள்'' என்று எழுதியுள்ளாராம். தாமரைச் செல்வர் வ. உ. சி. அவர்களுடைய புத்தகங்களைச் சுமந்து வீடுவீடாகச் சென்று விற்றிருக்கிருர்.

இச்செய்தியைத் தாமரைச் செல்வர் கூறக் கேட்டபின் திரு மு. அ. தமது நூலில் எழுதியுள்ள குற்றச்சாட்டை அவரிடம் காட்டினேன். அதைப் பார்த்துவிட்டு அவர் கூறியது :

''நெடிதுயர்ந்து தோற்றப் பொலிவுடன் வளர்ந்த திரு மு. அ. விடம் இத்தகைய குறுகிய மனப்பான்மை இருப்பது வருந்துதற்குரியதே. நீங்கள் எழுதியதில் கொடுஞ்சொற்கள் ஒன்றும் இன்மையால் இதனைச் செல்வியில் வெளியிடுதற்கு ஒப்புக் கொள்ளுகிறேன்'' என்று கூறியதோடு

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை"

என்ற வெண்பாவின் முதலிரண்டடிகளைச் சொல்லி அமைதி யுறுகின்றேன்" என்றனர்.

கழகம் வியாபார நோக்கோடு கொள்ளை யடிப்பதாக எழுதியுள்ளார். அஃது எவ்வளவு தமிழ்த்தொண்டு செய்து வருகிறது என்பதை நாடே அறியுமே. கழகம் இல்லையேல் இத்தனை தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை யார் வெளியிட்டிருக்கப் போகிறார்கள்? விரைவில் விற்கும் கதைப்புத்தகங்களை வெளியிடும் பதிப்பகமா கழகம்? வியாபார நோக்கு மட்டும் அதற்கிருந்திருந்தால் இதற்குள் எத்தனை அடுக்கு மாடிகளைக் கட்டியிருக்கமுடியும்? கழகம் பொருளதிகாரத்தைப் பதிப்பித்தது "வித்துவான் பட்டத்துக்குப் படிப்பவர்கள் தலையில் சுமத்துவதற்காக" என்கிறார் மு. அ. 'தலையில் சுமத்துவது' என்றால் தலையில் அறிவைச் சுமத்துவதற்குத்தானே அறிவுச் சுமையைச் சுமத்தும் செயலை வேண்டாததென்று அறிஞர்கள கூறமாட்டார். வித்துவான் பாடத்துக்குரிய நூல்களை இன்று வெளியிடுவது கழகந்தானே. வேறு யார் அதைச் செய்கிறார்கள்? நூல் வெளியீடு என்பது வியாபார நோக்கமென்ற கருத்தா? அவ்வாறாயின் இதுவரை நூல் வெளியிட்டவர் அனைவரும் வியாபார நோக்கமுடையவர்களா? வேறு எந்தப் பதிப்பகம் ஆராய்ச்சியாளர்கட்கும் பயன்படும் வகையில் நூலகத்தை நடத்துகிறது? கழகம் நடத்தும் தமிழாராய்ச்சிக்குத் தலைசிறந்த நூலகமான மறைமலையடிகள் நூல் நிலையத்திற்குத் திரு மு. அ. வந்து குறிப்பெடுப்பதைப் பார்த்திருக்கின்றேனே. இந்த நூல் நிலையத்தைப் பார்த்த பிறகுமா திரு மு. அ. வுக்குக் கழகத்தின் தமிழ்த் தொண்டு தெரியவில்லை. அந் நூல் நிலையத்தில் தமிழ்ப் புலவர் பெருமக்களின் திருவுருவப் படங்களனைத்தும் தொகுக்கப் பெற்றுள்ளன. நூலாசிரியரான திரு மு. அ. வின் படமும் கருத்து வேறுபாடு கருதாது இடம்பெறும் என்றும், அதுபோல் நூலாசிரியரான அவர்தம் வரலாறும் புலவர் வரலாற்று வரிசையில் இடம் பெறும் என்றும் உறுதியாக நம்பலாம். கண் பார்வையிழந்தவர்களுக்குக் கண்ணொளி வழங்கலாம். கண்களை மூடிக்கொண்டு பார்ப்போர்க்கும் காழ்ப்புக் கண்ணுடன் காண்போர்க்கும் உண்மைக் கண்ணொளியை வழங்குதல் எங்ஙனம்?

திருச்சிற்றம்பலம்

———

# அருள்மிகு தண்டபாணி அடிகள்

## இளமையிற்பாடும் இனிய நற்பேறு

திக்கெலாம் புகழும் திருநெல்வேலியில் நெற்கட்டும் செவ்வலில் வாழ்ந்த ஜமீனில் தானாபதியா யிருந்தவர் செந்திநாயகம் பிள்ளை. இவர் திருமணமாகி வாழ்ந்தபோது மகப்பேறற்றிருந்தார். மறுமணம் செய்தார். மகவில்லை. மேலும் ஒன்று செய்தார். ஆண் மகவில்லாத குறை. மனதை வாட்டியது. மகனிருந்து எள்ளும் நீரும் இறைப்பதாலே முத்தி. இல்லையெனில் நரகம் என்ற கோட்பாட்டில் ஊறிய மனத்தினரானார். வயதும் அறுபதை எட்டியது. இவர் அறிமுகமான குழந்தை வேற்பண்டாரம் என்பவரை இயல்பாகக் கண்டனர். ஏனப்பா! எனக்குப் போகிற வயதாயிற்று. நற்கதியில்லையா என்றார். இதற்கென்ன இரண்டு மகவுண்டாகும். இன்னொரு மணமும் செய்க என்றார். கேட்டதும் என்ன கேலியா செய்கிறாய். நான் மனம் வருந்திக் கேட்கிறேன் என்றார். "சாமீ, இது உண்மை. அப்படி மணம் செய்தும் மகவில்லையானால், இதோ என் கையில் உள்ள சோதிடஏட்டினை உங்கள் முன்னாலேயே தீயில் இடுவேன்" என்றார். பேச்சி முத்து என்ற சொந்தப் பெண்ணை மணந்தார்.

சோதிடன் சொன்னபடி முதற் பிள்ளையாகப் பிறந்தவர் தாம் இவர். பின் மூன்றாமாண்டில் பிறந்த தம்பி சித்திரபுத்திரராகும். செந்தினாயகம் பிள்ளை மணம் ஏற்றபின் காந்திமதியம்மாளிடம் மிக்க அன்பு பூண்டவராதலால் ஐப்பசித் திங்கள் சம்பாநதி யென்ற மண்டபத்தில் அம்மன் தவமிருந்து நெல்லையப்பரைத் திருமணம் செய்யும் விழா வந்தது. இவர் வழிபட்டார். தாயே ஏன் என்னை வருத்துகின்றாய். என் உள்ளமறியாயா என்று வேண்டினர். அது சமயம் அசரீரியாய் ஏன் வருத்தம். ஒன்றென்ன? இருமகவு தோன்றுமென்ற வாக்கைக் கேட்டனர். பரவசரானார். சோதிடரும் சொன்னார். தேவியும் இப்படிக் கூறினள். என்று மகிழ்ந்து அம்மன் திருவருள் நீறு பெற்று மனையாட்குதவினர். அதன் பின்பே இவ்விரு மகவும் தோன்றினர்.

முதலில் பிறந்த ஆண் மகவு பிறந்ததே யன்றி, அழவில்லை; பால் நுகரவில்லை. வாளா உயிர்ப்பதுமைபோலிருந்தது. கண்ட மாதர் மகவில்லை யென்ற குறை தீரப்பிறந்த இது, என்ன இப்படி யிருக்கிறது. எப்படிப் பிழைக்குமென்று பேசினர். கேட்ட தந்தையார் 'தெய்வமே கொடுத்த வரமும் பிள்ளை பிறந்ததும் இப்படி யிருப்பதும் உன் சோதனையா' என வருந்தினர். அன்றிரவு கனவு கண்டனர். இறைவன் ஏன் கவலை. இதோ திருநீறு. என் பெயர் சங்கரலிங்கம்; திருநீற்றை

யணிந்து இந்தப் பெயரையிட்டுக் கூப்பிடு. நலமாகுமென்றதை யறிந்தனர். விழித்தான். கையில் திருநீறு. நீலச்செவந்திப் பூ இருந்தது. வெறுங் கனவாயிராமல், கையில் மெய்யா யிருந்தது. மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும். காலை நியம முடித்துக் கடவுளை வேண்டிச் சொன்னபடி செய்தார். குழந்தை முறைப் படி வளர்ந்தது. இப்படி ஆறுவயதைப் பெற்றனர். சங்கர லிங்கர். தந்தைக்கு இவ்வுலக வாழ்வு நிறைவாயிற்று. தாய் குழந்தை தன்னிடமிருந்தால் கல்வி-ஒழுக்கமாதியன வராதென் றெண்ணினள். தமக்கை கணவர் வாழும் சுரண்டையில் விடுத்தனர். கல்வி கற்கலானார்—குழந்தை பிறந்தபின் மூன்று மாதம் தொட்டிலில் இட விரும்பினர். தந்தை கம்மியனிடம் பணமுதவி செய்ய ஏற்படுத்தினார். கம்மியன்செய்து வந்து வீட்டு வாயிலில் வைத்தான். மேலே கருடன் வட்டமிட்டுக் கூவியது. தந்தை முன்பணமாகக் கொடுத்ததன்றி, மொத்தப் பணமும் சேர்த்தே யுதவினர். முன்பணம் போகக் கூடி யிருப்பதைக் கம்மியன் கூறினன். மறக்கவில்லை. நன்னிமித்தம் கருதி, நீ மகிழ்வுடன் இருக்கவே கொடுத்தேன் என்றாராம்.

> "இன்பத்(து) அவாநெகிழ் புன் ஏனக் குருளையென
> வன்பற்ற சேய்கள் பல வாய்ப்பதினும்—தன்பல்
> அசையுமட்டும் நோன்புற்(று) அரியாப்போல் ஓர்சேய்
> இசையப் பெறுவது நன்றே"

என்ற பாடலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர் செந்தி லுயகர். அந்த நாளில் ஐந்தாண்டு வந்ததும் பள்ளியிற் சேர்ப்பர். அம்முறையிற் பள்ளி சேர்த்தனர். ஆசிரியருக்கு ஊதியமாகச் சில பொருள்களை மாணவர் உதவுவது அன்றைய முறை. வறட்டி, நல்லெண்ணெய், மிளகாய் இப்படி மரபு. அம் முறையில் வெள்ளிக்கிழமைதோறும் மாணவர் மிளகாய் தருவதை வெள்ளி மிளகாய் என்று கூறுவர். இவர் வெள்ளி யில் மிளகாய் போல் செய்து தருவதாகும் என்றெண்ணி அப்படிச் செய்து தரும்படி பெற்றோரிடம் வற்புறுத்தினர். தந்தையும் பிறரும் கூறியதை ஒப்பவில்லை. ஆசிரியரே வந்து இப்போது இந்த மிளகாயே போதும். நீ உன் மகன் படிக் கும்போது உன்கருத்துப்போற் செய்து கொடு என்றாராம்.

நவராத்திரி விழாச் சமயம் பள்ளி மாணவர்கட்குக் கோலாட்டம் போடப் பழக்குவதுண்டு. அதற்கு முக்கூடற் பள்ளுப் பாடலைப் பாடிக்கொண்டு தாளப்படி கோலாட்டம் செய்வது மரபு—அதில் பள்ளச்சிகள் நாற்று நடும்போது கையி லணிந்த காப்பு ஒன்றோடொன்று உரசி ஒலி யெழுப்பும். ஆசிரியர் பொருளறியார். காப்பு என்பதைக் கரப்பும் ஒலி யென்று சொல்லிக் கொடுத்தாராம். அந்த ஒலியுடன், பரம்பு

அடிக்கும் சங்கிலி ஒலியும் கூடி ஒலிக்கும். இதைக் கேட்ட இளைஞரான சங்கரலிங்கர், காப்பும் சங்கிலி ஒலியும் எனக் கூற வேண்டும் என்றார். கேட்ட ஆசிரியர் நாம் படிப்புச் சொல்லி யாவதில்லை என்று வெட்கினர்; இவ் விவரங்கள் என் தந்தையார் சொல்லக் கேட்டதாகும்.

எட்டரை யாண்டில் சுரண்டையில் வாழ்ந்த சமயம். அவ் வூர் மக்கள் 'பூமிகாத்தாள்' என்ற அம்மனை வழிபடலாயினர். மேளம் வெடி முதலியன ஒலித்தன. சிறுவருடன் சென்ற இவர், அவணிருந்த சிலரிடம் இந்த அம்மன் பெயரென்ன என்றார். பெயர் கூறினர். அதன் பொருளென்ன என்றார். பதில் கூற முன் வரவில்லை எவரும். ஒருவர் எதாயிருந்தால் உனக்கென்ன என்றார். திருநெல்வேலிக்காரனல்லவா என்றார் ஒருவர். திருநெல்வேலிக்காரன் ஊகமுடையவன் என்ற நற்கருத்தன்று. குறும்புக்காரன் என்பது அவரது எண்ணம். 'ஒருவர் சிறுவனை யினும் கேட்பது சரிதானே? தெரிந்தாற் கூறுங்கள் இல்லை யென்றால் தெரியாதென்று கூறுங்கள் என்று நீதி மொழிந்தார். அவ்வளவுதான், திருவருள் ஊற்றுப் பொங்கி வழியலாயிற்று.

முன்னொருகால், உமையவள் இறைவன் நஞ்சருந்திய போது, உலகங்கட்கெல்லாம் மூலப்பொருளான பெருமான் நஞ்சினை உண்டதால் ஏதேனும் ஊறுநேரின் எல்லா வுயி ரினமும் அழியுமே என்றஞ்சினாள். கழுத்தைப் பிடித்தாள். நஞ்சு அங்கேயே நின்றது. உலகம் வாழ வகுத்தது தாயுள்ளம். எனவே பூமியைக் காத்தவள் என்ற பொருளில் வெண்பா உதய மாயிற்று. கூறினர். கேட்டவர் வியந்தனர் என்பதைக் கூறவும் வேண்டுமா என்ன—வழிபாடு முடிந்தபின் எல்லா மரியாதை களும் சங்கரலிங்கத்துக்கே தான். வயதில் மூத்த நமக்கெல் லாம் இதுவரை தெரியாத கருத்து நாம் அறியச் செய்த சங்கர லிங்கம் தெய்வப்பிறவி யென்றார்கள்.

"அமுதம் கடையும்நாள் ஆலம் வெடித்துத்
திமுதமெனத் தீயெரித்துச் சென்ற(து) அமுதமெனத்
தீக்கடவுள் உண்டார்; திருக்கண்டத் தைப்பிடித்துக்
காத்ததனாற் பூமிகாத் தாள்" என்பது பாடல்.

முதலில், மங்கலமாக அமுதம் என்றும், எழுத்துக்களின் முதலாவதான அகரத்தில் அமைந்தது சிறப்பென்றும், தீ யெரித்து வந்த விடத்தை உண்டவர் தீக்கடவுள் என்றும், பாவினத்திற் சிறந்த வெண்பாவி லமைந்தது தெய்வப்பண் பென்றும், அறியவுள்ளது. —தி. செ. மு.

# இலங்கை உலகத் தமிழ் மாநாட்டுத் தமிழ்ப் பேராளர்கட்குச் சென்னையில் வரவேற்பு

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற தமிழ் மாநாட்டிற்குச் சென்று திரும்பிய தமிழறிஞர்கட்கு மறைமலையடிகள் நூல்நிலையத்தின் உறுப்பான மறைமலையடிகள் வட்டமும் தமிழ்க்கலைமன்றமும் வரவேற்பு விழா நடத்தியது. மறைமலையடிகள் நூல்நிலையத்தில் அமைந்துள்ள வள்ளலார் மண்டபத்தில் 4—2—74இல் நடைபெற்ற இவ் விழாவிற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். ந. சஞ்சீவி தலைமைதாங்கினார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் நூலகர் இரா. முத்துக்குமாரசாமி வரவேற்றார்.

தலைமைதாங்கிய டாக்டர். ந. சஞ்சீவி அவர்கள் மாநாட்டு அமைப்பாளர்களைச் சிறப்பாக மாநாட்டை நடத்தி முடித்தமைக்காகப் பாராட்டினார். இந்திய அரசும் இலங்கை அரசும் இணைந்து நின்றிருந்தால் தமிழறிஞர்கள் நூற்றுக்கணக்கில் இம் மாநாட்டில் கலந்து கொண்டிருக்க முடியுமென்றார்.

மாநாட்டின் இறுதிநாளன்று இலங்கைக் காவல் துறையினரின் வன்முறையால் தமிழர் எழுவர் உயிர்துறக்க நேர்ந்தது குறிப்பிட்டு அவர் பேசுகையில் ‘வங்க தேசப் பிரச்சினையை வெளிநாட்டுப் பிரச்சினை என்று ஒதுக்காமல் இந்திய அரசு உதவிக்கரம் நீட்டியதைப்போல, உலகத்தமிழ் மாநாட்டில் நடந்த ஈழத்துத் தமிழர் பிரச்சினையிலும் அன்பும் அக்கறையும் காட்டியிருக்கலாம்,’’ என்றார். ‘‘இலங்கைத் தமிழர்களுக்கு நடந்த இந்தக் கொடுமையான நிகழ்ச்சியின் போதும் மாநாட்டுக்கும் அங்குள்ள இந்திய நாட்டுத் தூதுவரோ அல்லது அவர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களோ ஒருவர் கூடச் செல்லாதது வருந்தத் தக்கது’’ என்று அவர் குறிப்பிட்டார்.

மாநாட்டிற்குச் சென்று திரும்பிய தமிழறிஞர்கள் டாக்டர். தவத்திரு. இராசமாணிக்கம், திரு. இரா. கணேசன், திரு. கொடுமுடி சண்முகம், திரு. புலவர் செ. இராசு. சிங்கப்பூர் தமிழ் இளைஞர் மன்றத்துப் பெரியசாமி ஆகியோர் தத்தம் பயண அனுபவங்களையும் மாநாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துரைத்தனர்.

மாநாட்டு அவல நிகழ்ச்சியில் உயிர்துறந்த தமிழ்மக்கள் எழுவர்க்கும் வணக்கம் தெரிவிக்கும் வகையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. கூட்டத்தினர் இரு நிமிடங்கள் அமைதியாக நின்று வணக்கம் தெரிவித்தனர்.

விழா இறுதியில் தமிழ்க்கலைமன்றச் செயலாளர் திரு. க. ப. அறவாணன் நன்றி கூறினார்.

விழாவையொட்டி மாநாட்டு ஆராய்ச்சித்தாள்கள், இலங்கை இதழ்கள், நூல்கள் கொண்ட காட்சியும் அமைக்கப் பெற்றிருந்தது.

# மதுரைத் தமிழிசைச் சங்கத்திற்கு
# 6 லட்ச ரூபாய் நன்கொடை

தமிழிசை விழாவும் மதுரைத் தமிழிசைச் சங்கத் தொடக்க விழாவும் தமுக்கம் சுவாமி சங்கரதாஸ் கலை அரங்கில் 21—1—74 அன்று சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது.

தமிழிசைச் சங்கத்தின் தலைவரும் பசுமலை மகாலட்சுமி ஆலை அதிபருமான திரு லெ. அழகுசுந்தரம் செட்டியார் வரவேற்புரை வழங்கினர். மதுரை மாநகராட்சி மன்றத் தலைவர் திரு எஸ். முத்து அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். தமிழவேள் திரு பி. டி. இராசன் அவர்கள் தமிழிசைச் சங்கத்தைத் தொடங்கி வைத்து அரிய உரையாற்றினர். மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனர் விழாவிற்குத் தலைமை தாங்கினர். அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தரும் சென்னைத் தமிழ் இசைச்சங்கத் தலைவருமான தாமரையணி (பத்மபூஷன்) டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் ஒளிவிளக் கேற்றி வைத்து வாழ்த்துரை வழங்கினர்.

விழாவை முன்னிட்டுத் தயாரிக்கப்பட்ட சிறப்பு மலரை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ. ஆர். சீத்தாராம் தாஸ் வெளியிட்டார்.

சென்னைத் தமிழிசைச் சங்கத் தலைவர் திவான் பகதூர் தி. மு. நாராயணசாமி பிள்ளை, தமிழ்க் கடல் திரு. ராய சொக்கலிங்கம், உயர் நீதிமன்ற நடுவர்களான திரு எஸ் நடராஜன், திரு கோகுல கிருட்டிணன் ஆகியோர் தமிழிசைச் சங்கத்தை ஆதரிப்பதன் இன்றியமையாமை பற்றி உரையாற்றினர்.

திருவாளர்கள் அழகு சுந்தரம் செட்டியார், சுப்பிரமணியம் செட்டியார், எல். கிருஷ்ணன், எஸ் கே. ஏ. ஆர். எஸ். இராமநாதன் செட்டியார், மாணிக்கம் செட்டியார் ஆகியோர் வருகை தந்திருந்த ஏழு தலைவர்கட்கும் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தனர்.

**நன்கொடை**

விழா இறுதியில், சங்கச் செயலாளர் திரு இராம. அறு. சுப்பிரமணியம் செட்டியார் விரைவில் தமிழிசை சங்கத்திற்கெனச் சொந்தக் கட்டிடம் கட்டப்படுமென்றும், இந்த விழாவிற்கு நன்கொடை மூலமும், சிறப்பு மலருக்கு வாங்கப்பட்ட விளம்பரக் கட்டணத்தின் மூலமும், நுழைவுச் சீட்டு விற்பனை மூலமும் மூன்று லட்சத்து ஓராயிரத்து நூற்றி நாற்பத்தொரு ரூபாக்கள் கிடைத்திருப்பதாகவும், அத்துடன் செட்டி நாட்டரசர் மூன்று லட்சம் கொடுக்க இசைந்துள்ளார் என்றும், ஆக மொத்தம் ஆறு லட்ச ரூபாக்கள் நன்கொடையாகக் கிடைத்துள்ளது என்றும் செய்தியை நன்றி கூறுமுகத்தான் பல்லாயிரக்கணக்கான மக்களின் கையொலிக் கிடையே அறிவித்தார்.

*வெல்க தமிழிசை ! வாழ்க தமிழ் !*

# செய்திகளும் குறிப்புகளும்

## சென்னைப் பல்கலைக் கழகப் புதுநூல்கள் வெளியீட்டு விழா

அண்மையில் வெளிவந்துள்ள சென்னைப் பல்கலைக் கழக நூல்கள் 66 கொண்ட தொகுப்பு ஒன்றினை வெளியிடும் விழா 21—1—74இல் பல்கலைக் கழக நூற்றாண்டு அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குப் பல்கலைக் கழக இணைவேந்தரும், கல்வி அமைச்சருமான மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் நூல்களை வெளியிட்டார்கள்.

நாவலர் அவர்கள் தமது தலைமையுரையில் கல்லூரிப் பேராசிரியர்கள் ஒவ்வொருவரும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு ஏதாவது ஒரு பொருள் பற்றி டாக்டர் பட்டம் பெறுபவர்களை ஊக்கும் வண்ணம் முயல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நூல் தொகுப்பினை வெளியிட்டுப் பேசிய கலைஞர் அவர்கள், தமிழ் நாட்டின் வரலாறு, கலை, பண்பாடு ஆகியன பற்றி நம் நாட்டில் உள்ளவர்களும் அயல் நாட்டவரும் அறிந்து கொள்ளும் வகையில் பல்கலைக் கழகங்கள் நூல்களைத் தயாரித்து வெளியிட வேண்டும் என்றும், பல்கலைக் கழக ஆராய்ச்சி பொது மக்கள், குறிப்பாக ஏழை மக்கள் மூட நம்பிக்கைகளினின்று விடுபட உதவும் வகையிலும் அமைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிடும் நூல்களை வெளி மாநிலங்கள் மொழி பெயர்த்து வெளியிடும் சிறப்புப் பெற்றுள்ளன என்றார். டாக்டர் சுப. சண்முகநாதன் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

## சிவஞான போதம் கல்வெட்டுத் திறப்பு விழா

திருவாலவாய்ச் சைவசித்தாந்த சபையின் சார்பில் 25—1—74இல் மதுரை பொற்றாமரைக் குளத்தின் தென்புறத்தில் பொறிக்கப் பட்டுள்ள 'சிவஞான போதம்' கல்வெட்டுத் திறப்பு விழா சா. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பனந்தாள் காசிமடத்தின் தலைவர் காசிவாசி தவத்திரு முத்துக் குமாரசாமித் தம்பிரான் அடிகள், சிவஞான போதச் சூத்திரங்களைப் பளிங்குக்கற்களில் பொறிக்கச் செய்து வழங்கியுள்ளனர். இக் கல்வெட்டினை இந்து அறநிலைய ஆணையர் திரு. எம். ஏ. முருகேசன் அவர்கள் திறந்துவைத்தார்கள். திரு. சாத்தப்ப செட்டியார் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். திரு. என். எஸ். இராமச்சந்திரன் விழாவினைத் துவக்கி வைத்தார்கள்.

12 நூற்பாக்களைக் கொண்ட இச் 'சிவஞான போதம்' சைவசித்தாந்த அறிவினைப் புகட்டும் முழுமுதல் நூலாகும். பேராசிரியர் சங்கர

நாராயணர் அவர்கள் இதன் சிறப்பினை விளக்கி உரையாற்றினர். திருவாலவாய் சைவசித்தாந்த சபைச் செயலாளர் திரு. டி. எஸ். கோவிந்தசாமி அவர்கள் நன்றி கூறினர்.

சிவஞான போதத்தின் மாண்பினை நிலைநாட்ட தவத்திரு முத்துக்குமாரசாமி அடிகளார் மேற்கொண்ட முயற்சிக்கும், அதனைப் பதிவு செய்த சைவசித்தாந்த சபையினரின் திருப்பணிக்கும் தமிழகத்தின் நன்றி என்றும் உரித்தாகும்.

## இராமலிங்க அடிகள் சித்தி நூற்றாண்டு விழா

வள்ளல் இராமலிங்க அடிகளார் சித்தி பெற்று 30—1—74இல் நூற்றாண்டுகள் நிறைவுற்றன. அதனை முன்னிட்டு, புதிப்பிக்கப்பட்டுள்ள தியானமண்டபத் திறப்பு விழாவும், வள்ளலார் சித்தி நூற்றாண்டு விழாவும், 'வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு' 'வள்ளலார் வாழ்வும் வாக்கும்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவும், வடலூரில் நடைபெற்றன.

சென்னை உயர்நீதி மன்ற நடுவர் மாண்புமிகு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமை தாங்கினர். திருவண்ணாமலை கௌதம ஆசிரமம் தவத்திரு சுவாமி சீனிவாசலு, சிலத்திரு காஞ்சி ஞானப்பிரகாச அடிகள், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள், சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தர் எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு' என்னும் நூலினை மாண்புமிகு நடுவர் கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் வெளியிட திரு. எ. சென்னபதி கவுண்டர் பெற்றுக் கொண்டார். திரு அ. லெ. நடராசன் அவர்கள் எழுதிய 'வள்ளலார் வாழ்வும் வாக்கும்' என்னும் நூலினைச் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் வெளியிட ஓமந்தூர் திரு எம். வெங்கடராம ரெட்டியார் பெற்றுக் கொண்டார்.

தவத்திரு சுவாமி சீனிவாசலு அருளுரை வழங்க, சிவத்திரு ஞானப்பிரகாச அடிகள் ஆசியுரை வழங்க, மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்களும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் சிறப்புரை வழங்க விழா இனிது நிறைவேறிற்று. அன்று காலை அருட்பெருஞ்சோதி அகவல் ஓதுதலும், சோதி வழிபாடும் நடைபெற்றன. வள்ளலாரின் அருட்பணியும் அறிவுப் பணியும் யாண்டும் பரவுக.

---

## துன்பச் செய்தி

### ஈழத்துச் சிவானந்த அடிகள்

27—1—74இல் காஞ்சிபுரத்தில் இறையடி சேர்ந்தமை தெரிந்து பெரிதும் வருந்துகின்றோம். 1937 ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றபோது கருவூரிலிருந்த ஈழத்துச் சிவானந்த அடிகள் கழக ஆட்சியாளர்க்குக் கடிதங்களும் கட்டுரைகளும் எழுதித் தம்முடைய அரிய கருத்துக்களைத்

தெரிவித்துள்ளனர். மறைமலையடிகளார் எழுதிய 'இந்தி பொது மொழியா?' என்ற சிறந்த ஆராய்ச்சி நூலை அடிகளாரின் இசைவு பெருமலேயே துணிந்து 15,000 படிகள் அச்சிட்டுத் தமிழ் நாடெங்கும் பரப்பி இயக்கத்துக்கு வலிவும் எழுச்சியும் ஊட்டினர். அடிகளார் அது குறித்து ஈழத்தடிகட்கு அனுப்பிய கண்டனக் கடிதத்திற்கு ஆறுதற் கடிதம் எழுதி அவர்களின் ஒப்புதலைப் பெற்றனர். அடிகள் மறியல் செய்து சிறையில் வைக்கப் பெற்றனர். அப்போது அவர்கட்கு ஆட்சியாளர் கைச் செலவுக்குச் சிறு தொகைகள் அனுப்பி வந்ததோடு செய்தி இதழும் அனுப்பி வைத்தனர். இந்தி எதிர்ப்பியக்க வரலாற்றில் அவர்கட்குத் தனிச் சிறப்பிடமுண்டு எனின் அது மிகையாகாது. அவர்கள் ஆருயிர் இறையடியில் இன்ப அன்புற்றமர்கவென வேண்டுவோம்.

---

# மதிப்புரை

## இசைக் கலை வல்லுநர்கள்

[ஆசிரியர்: V. S. கோமதி சங்கர ஐயர், வீணை விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

கிடைக்குமிடம்: V. G. C. இசைஆய்வாளர், 22, கீழ்ப் புதுத்தெரு, சிதம்பரம்-608001. விலை: ரூ. 4-25.

இந்நூலில் திரு ஐயர் அவர்கள் தொடர்பு கொண்ட இசை வல்லுநர் பலரின் வரலாறுகளைச் சுவைபட எழுதியுள்ளார். இசை நுணுக்கங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். இசைப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்களின் ஆங்கில முன்னுரையுடன் கூடிய சிறந்த வரலாறு நூல்.

## இசையுலகில் மகா வைத்தியநாத சிவன்

[ஆசிரியர்: V. S. கோமதி சங்கர ஐயர். (2 பாகங்கள்) விலை: முதற்பாகம் ரூ. 4-25, 2ஆம் பாகம் ரூ. 6-75.]

இந்நூல் இசையுலகில் சிறப்புற்று விளங்கிய மகா வைத்தியநாத சிவன் அவர்களைப் பற்றிய அரிய வரலாற்று நூலாகும். இதுவும் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி ஐயர் அவர்களின் முன்னுரையுடன் கூடியது. 2ஆம் பாகம், வீணை வித்துவான் எஸ். பாலச்சந்தர் அவர்களின் முன்னுரையுடன் கூடியது.

குறிப்பு: இந் நூல்கள் கழக நிலையங்களிலெல்லாம் கிடைக்கப் பெறும்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 600001 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

# கழகப் புதிய வெளியீடுகள்

## அம்புலிப் பயணம்

*—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எஸ்.,பி.டி.*

நிலவுலகினின்று நிலா உலகிற்குப் பயணம் செய்யும் முயற்சியில் பன்னெடுங் காலமாக ஈடுபட்டு வரும் மனிதனின் முயற்சி வெற்றிபெற்ற காலம் இது. இத்துறையில் அமெரிக்க, உருசிய விண்வெளி வீரர்கள் பெற்றுள்ள வெற்றிகளையும் 17 அப்போலோ பயணங்கள் பற்றியும் விளக்கமாகச் சிறுவர்க்குப் பயன்படும் வகையில்-படங்களுடன் வெளிவந்துள்ள அழகிய பதிப்பு. விலை 4-00

## திருவருட்பாப் புகழ்த்திரட்டு

*—வள்ளலார் இராமலிங்க அடிகள்*

இது திருக்குறள் தெளிவுரையைப்போல் கையடக்கமானதொரு பதிப்பு. இதன்கண் திருவருட்பாவினின்று 'திருவடிப் புகழ்ச்சி' 'மகாதேவமாலை' 'அருட்பெருஞ் சோதி அகவல்' 'அருட்பெருஞ் சோதி அட்டகம்' ஆகிய நான்கு பதிகங்கள் முழுமையாகவும், மற்றுமுள்ள பதிகங்களினின்றும் கீர்த்தனங்களினின்றும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், உமையம்மை, அம்பலவாணர், திருமால் ஆகிய தெய்வங்களைப்பற்றி வள்ளலார் பாடியுள்ள பாடல்களுள் சிலவும் இடம் பெற்றுள்ளன. விலை 2-25

உயர்ந்த பரிசுப் பதிப்பு விலை 4-00

## திருப்புகழ் மூலம் முழுவதும் (விளக்க அடிக் குறிப்புகளுடன்)

1300க்கு மேற்பட்ட பாடல்கள் அடங்கியுள்ளன. இன்றியமையாத குறிப்புரைகளும்,விளக்கங்களும் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளன. அருணகிரிநாதர் வரலாறும் உள்ளது. ஏறத்தாழ 900 - பக்கங்களுடையது புலவர் பெருமக்கள் பாராட்டும் சிறந்த பதிப்பு. பாடல்களின் பெரும் பிரிவுகள் அகரவரிசையில் அமைக்கப் பெற்றுள்ளன. விலை ரூ. 16-00

## காக்கை பாடினியம் (விளக்கவுரையுடன்)

இந்நூல் யாப்பிலக்கணத்தை விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றது. யாப்பருங்கல விருத்தியைப்போல் நூற்பாக்களும், உரையும், மேற்கோள்களும், எடுத்துக்காட்டுகளும் அமைந்துள்ளன. புலவர் இரா. இளங்குமரன் அவர்களின் அரிய உழைப்பின் எடுத்துக்காட்டாக இப்பதிப்பு அமைந்துள்ளது. யாப்பிலக்கணத்தில் தெளிந்த அறிவும் பெரும்புலமையும் பெறவிரும்புவோர் விரும்பிக் கற்கும் முறையில் இப்பதிப்பு விளங்குகின்றது.

விலை ரூ. 10-00

பதிவு எண் : M. 4899

# பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| காப்பியங்களில் திருக்குறள் —மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் | 8 | 00 |
| ஆய்வுக் கோவை (தொகுப்பு) | 15 | 00 |
| திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும் —க. த. திருநாவுக்கரசு | 3 | 50 |

## கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியார் நூல்கள்

| | | |
|---|---|---|
| திருக்கண்ணப்ப நாயனார் சரித்திரச் சுருக்கம் | 0 | 37 |
| சேக்கிழார் | 3 | 00 |
| திருமூலதேவ நாயனார் புராணம் | 1 | 50 |
| சிறுத்தொண்ட நாயனார் புராணம்—உரையுடன் | 1 | 25 |
| திருவாரூர் மும்மணிக்கோவை—உரையுடன் | 0 | 75 |
| சண்டேசுர நாயனார் புராணம் | 0 | 75 |

## கலைக்கதிர் வெளியீடுகள் :

| | | |
|---|---|---|
| சிந்தனை மலர்கள்—நெ. து. சுந்தரவடிவேலு | 3 | 50 |
| திருக்குறளில் வேளாண்மை—இல. செ. கந்தசாமி | 3 | 00 |
| தமிழியல் ஓர் அகநோக்கு—டாக்டர் ரா. ஏ. ஞானமூர்த்தி | 8 | 00 |
| காற்றுப் பெருங்கடல்—பிராங்கு எச். பாரெஸ்டர் | 2 | 50 |
| விஞ்ஞான விளக்கம் (I, III தனித்தனி) | 3 | 00 |
| தமிழ் மொழி வரலாறு—டாக்டர் தெ. பொ. மீ. | 20 | 00 |

## சென்னைப் பல்கலைக்கழக வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் —டாக்டர் ந. சஞ்சீவி | 25 | 00 |
| Foreign Notices of South India from Megasthenes to Ma Huan—Ed. By. K. A. Nilakanta Sastri | 15 | 00 |
| Mackenzie Manuscripts-Vol I (Tamil & Malayalam) —Ed. By. Dr. T. V. Mahalingam | 25 | 00 |
| Researches in Personality & Social Problems — Dr. T. E. Shanmugam | 25 | 00 |
| Sataratna Sangraha of Sri Umapati Sivacarya —Prof. P. Thirugnanasambandhan | 10 | 00 |
| Some landmarks in the History of Tamil Prose —R. E. Asher | 1 | 00 |
| First All India Tirukkural Seminar Papers 1972 | 10 | 00 |

அப்பர் அச்சகம், சென்னை-600 001.